www.padippakam.com

# கலை விளக்கு

தீபம் 8



ஆடி - ஆவணி - 87.

-90 வெளி.

மேல் நாட்டுச் சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்தம் மனைகளில் சுடர்விட்டு ஒளிரட்டும் இக் கலை விளக்கு

ஆசிரியர் : எஸ். பி. நாதன்

KAMENER STR, 28, 4600, DORTMUND

படிப்பகம்

www.padippakam.com

# வாசகர்களே!

இச் சஞ்சிகையில் உங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள், சிறுவர்களுக்கான ஆக்கங்கள் யாவும் பிரசுரிக்கப்படும். ஆக்கங்களை இன்றே கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுங்கள்

S. PACKIYANATHAN,
KAMENER STR, 28
4600, DORTMUND, 1
WEST-GERMANY.

தீவிளக்கு சஞ்சிகையில் வரும், கதைகளில் இடம் பெற்ற சம்பவங்கள் பெயர்கள் யாவும் கற்பனையே. ஆக்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆக்கங்களைப் படைத்தோரே பொறுப்பாளிகளாவர்.

www.padippakam.com

Parthipan

# எம் மனதில் உதிப்பவை....

கலைவிளக்கு எத்தனையோ சிரமத்தின் மத்தியில் எட்டாவது வெளியீடாக இன்று உங்கள் கைகளில் ஒளிவீசுகின்றது. இச்சஞ்சிகை குறிப்பிட்ட மாதத்தில் வெளியிட முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டமைக்கு மனம் வருந்துகின்றோம். எம்மை எதிர்நோக்கிய சில புறக்காரணிகள் இச்சஞ்சிகை எழுதுவதில் தடைகள் ஏற்படுத்தியது என்பதைக் கூறி வாசகர்களாகிய உங்களிடம் இருந்து மன்னிப்புக் கோருகின்றோம்.

கலைவிளக்கு எதுவித லாபநோக்குமின்றி இலக்கிய அறிவியற் சேவை கருதியே இயங்கிவந்து தொடர்ந்தும் அவ்வாறான நோக்கத்திற்றான் இயங்கும் என்பதையும் ஆணித்தரமாகக் கூறுகின்றோம். மாதம் ஒரு முறை என்ற ரீதியில் சுடர் விட்டு வந்த கலைவிளக்கு இனிமேல் இருமாதத்துக்கு ஒரு முறைதான் சுடர்வீசப் போகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இருமாதத்துக்கு ஒன்று என இச்சஞ்சிகை வெளியிடப்பட்டாலும், இது சமர்த்துவரும் விடயதானங்கள் அளவிற் கூடியதாக, அதிக பக்கங்களுடன் பிரகாசிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் கூறி வைக்கின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com

வேத சுடர் கலைவிளக்கு காலந்தாழ்த்தியமையால் வாசகர்களின் ஆர்வத்தைக் காணக்கூடியதாயிருந்தது. அவர்கள் பொறுமையையும் இழந்து நேரடித் தொடர்பு கொண்டு எம்மைத் திணறடித்தனர். இது ஒரு வேதனையாக இருந்தாலும் மறுபக்கம் திருப்தியை எமக்கு கொடுத்தது என்றே சொல்ல வேண்டும். அருமை வாசகர்களின் ஊக்கத்தினால் கலைவிளக்கு சுடர் விடும் என்பது உண்மை.

சில வாசகர்கள் தம்மாலான உதவியைச் செய்ய முன்வந்தனர். குறிப்பாக தம் கையெழுத்தில் பல பக்கங்களை எழுதித் தந்த திருமதி நிருபா. தங்கவேற்பிள்ளைக்கு எமது நன்றி. அத்துடன் இச் சஞ்சிகை வெளியிடுவதில் அதிக ஆர்வமும், ஊக்கமும் காட்டிய திரு. K. மணியத்துக்கும் நன்றி.

வாசகர்களே! இனிவரும் தீபம் 1-10-87ல் புரட்டாதி - ஐப்பசி, இரு திங்கள் சுடராக பிரகாசிக்கும் என்பதை அறிவிக்கின்றோம்.

"நல்ல செயற்பாடுகளைச் செய்ய
முனைகின்றவர்கள் பல இடர்களை
எதிர் நோக்குவது உண்மை"


- ஆ - ர் -



படிப்பகம்

www.padippakam.com

# பூகோளம்




| | |
|---|---|
| **சுவீடன் [SWEDEN]** | **ஈராக் [IRAQ]** |
| நிலப்பரப்பு - 173,657 ச.மை. | நிலப்பரப்பு - 173,268 ச.மை. |
| சனத்தொகை - 8,303 Mill (1980) | சனத்தொகை - 12.77 Mil. (1979) |
| தலைநகர் - ஸ்ரொக்ஹோல்ம் (Stockholm) | தலைநகர் - பாக்தாத் (Badhdad) |
| மொழி - சுவீடிஷ். | மொழி - அராபிக். |
| **ஐஸ்லண்ட் [ICELAND]** | **ஹங்கேரி [HUNGARY]** |
| நிலப்பரப்பு - 39,770 ச.மை. | நிலப்பரப்பு - 35,919 ச.மை. |
| சனத்தொகை - 224000 மக்கள் (1979) | சனத்தொகை - 10,71 Mill (1980) |
| தலைநகர் - ரெய்க்யாவிக் (REYKJAVIK) | தலைநகர் - புடாபெஸ்ட் (Budapes[illegible] |
| மொழி - ஐஸ்லாண்டிக் | மொழி - ஹங்கேரியன். |

www.padippakam.com

# வள்ளுவர் காட்டும் வழி

1. வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

மனதிலே வஞ்சம் உடையவர்களது செய்கை யாவும் பொய்யானவையே இவ்வொழுக்கத்தை மறந்தவர்கள் கண்டு அவனை வெறுக்க முன்பு அவனுடலில் கலந்து உயிரூட்டும் ஐந்து பூதங்களும் தம்முள் சிரித்துக் கொள்ளுமாம்.

2. பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்

சில வேளைகளில் நன்மையான ஒரு செயலுக்கு, அவசியமான சூழ்நிலையில் கூறப்படும் பொய்யான சொற்கள், பொய்யாக இருந்தாலும் அங்கே வாய்மை (உண்மை) என்று கருதக் கூடியதான தன்மையைப் பெறும்.

3. மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல்லர்.

மேன்மைப் பண்பு இல்லாதவர்கள், வாழ்க்கையின் மேன்மட்ட நிலையில் வாழ்ந்தாலும் அவர்கள் மேலானவர்கள் அல்லர். அதேபோல் இழி குணம் இல்லாதவர்கள் கீழ் மட்ட நிலையில், வறுமை நிலையிலே இருந்தாலும் அவர்கள் கீழ் மக்கள் அல்லர்.

www.padippakam.com

# "பாவிகளும் அப்பாவிகளும்"

## கல்யாணிதாசன்

"பாவிகள் பலர் உண்டு உன்னிடத்திலே -
அப்பாவிகள் சிலர் உண்டு உன் படைப்பிலே
கோயில்கள் ஏன் படைத்தாய் கோவமுருகா!
வெறுங் கோவத்தில் என்ன பயன் கூறுமுருகா?"

மக்களில் பலர் பாவிகளாகவும், சிலர் அப்பாவிகளாகவும் படைக்கப்பட்டுள்ளார்கள்; ஆக்கப்பட்டுள்ளார்கள்; ஆகியுள்ளார்கள். பாவிகள் தங்கள் சுயநலத்திலே கண்ணாயிருந்து காரியம் முடிக்கின்றார்கள். மற்றவர்களை எப்படிக் கவிழ்க்கலாம் என்ற இறுகிய மனப்பான்மை கொண்டவர்களும் இவர்களே! ஒரு சிலர் தங்கள் தற்பெருமை கருதி உதவி செய்கின்றார்கள். இன்னும் ஒரு சிலர் ஆதரவற்றவர்களுக்கும், கஷ்டப்படுகின்றவர்களுக்கும் சேர வேண்டியவற்றில் தங்கள் சொந்த காரியங்களைக் கவனிக்கின்றார்கள். உதவிகளில் தங்கள் உறைக்குள் போட்டுக் கொண்டு உல்லாசவாழ்க்கை வாழ்கின்றார்கள்; வாழ ஆசைப்படுகின்றார்கள். இது நீடிக்கலாமா? அடுத்த பகுதி அடுத்தவர்களின் அரவணைப்பு வாழ்கின்ற



படிப்பகம்

www.padippakam.com

ர்கள். நோய்கள் பிறந்தது இதற்காகத்தான் என்று எண்ணி விட்டவர்கள் போல் நடந்துகொள்கின்றார்கள். அப்பாவிகளாக உள்ளவர்கள் நோய்களிடம் உணர முடியாமல் அடுத்தவர் தனிப் பற்றியும் அறிய முடியாமல் இவர்களுக்கிடையில் நின்று திண்டாடுகின்றார்கள்.

எம்மக்களுக்கிடையே இருந்து வரும் சிக்கிய கேள்விகள்.

தமிழ் ஈழம் கிடைக்குமா?
பாவிகள் மாறுவார்கள் (ளா?)
அப்பாவிகள் ஆதரிக்கப்படுவார்கள் (ளா)?

"எவருக்கும், எதற்கும் பிரயோசனமற்றவர்கள் தாழ்வடையலாம்.

ஆனால்,
மற்றவர்களின் கஷ்டங்களில் பங்குபெறுபவர்கள் தாழ்வடையக் கூடாது."

— x — x — x — x — x — x —

(55ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தவண்ணம் வந்தனர். ஊர்வல முடிவில் இந்தியத்தூதுவராலயம் வரை சென்றடைந்து, இந்திய தூதுவரிடம் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. 12 மணியளவில் இவ்வூர்வலம் முடிவடைந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# இன்று பாரதியார் இங்குள்ள (ஐரோப்பிய நாடுகள்) தமிழ் சமுதாயத்தை.... பார்த்தால்

- விக்னா -

வரகவி பாரதியார் தனது கனவுகள் கற்பனைகள் யாவும் நனவாக வேண்டும், அதை நான் பார்க்க வேண்டும், என்று பாரதியார் நினைத்திருந்தார். அந்நாட்களுக்காக ஏங்கியிருந்தார், புதியதோர் உலகம் சமைப்போம் என்றிட சங்கற்பம் கொண்டார் அக்காலத்திலே.

[ கற்பனை நிகழ்வு ].

இன்று பாரதி

உடல் நலம் குன்றி ஜோர்மன் போட்டவர்களாய் குனிந்து
வாழ் தமிழ் சமுதாயத்தை ஒரு கொண்டு நடக்கின்றனர்.
கணம் நோக்க வருகிறார். பாரதியாரோ அவர்களைக்
தலையில் தலைப்பா கண்டு ஏதோ விசாரிப்ப
-கையுடன், நெற்றியில் -தாகாக மெல்ல அவர்கள்
சந்தனப் பொட்டுடன், முறு நகர்வு மேனாகின்றனர். என்
க்கு மீசையுடன், வேட்டி - னைக் கண்டு ஏன் இந்
சேட்டுடன், வருகின்றா தமிழர்கள் தலையை குனிந்
கோலத்தைக் கண்டு மத்திய ன்றார்கள். இப்படி இன்றும்
தர வயது மதிக்கத்தக்கவன் ஏற்படுகிறதே அன்று தான்
இருவர் தலையை வேறு இப்படியான நிலை கண்டு
பக்கம் திருப்பி தொங்கப் தமிழன் என்று சொல்லடா.

www.padippakam.com

தலைநிமிர்ந்து நில்லடா என்று பாடினேனே! இன்று அது எல்லாம் காற்றோடு காற்றாய் போய்விட்டது ஆரம்ப விழாவிலேயே என மனம் புழுங்கினேன்.

மேல் நாடு வந்த தமிழர்கள் தமது பாரம்பரிய நடையுடை பாவனையைக் கண்டு அஞ்சுகிறார்களோ? ஏன், முன்பு தமிழ் நாட்டிலே இந்த மோகம் இருந்ததுதான். வெள்ளைக்கார ஆட்சியில் அவர்கள் நடையுடை பாவனையை நம் தமிழர் பின்பற்றுவதை மனம் பொறுத்து நான் மனக்கிலேசமுற்று கவிதை வாசகத்தில் உணர்வலமாக அனுப்பி அதைத் தடுக்க முயற்சித்தேன். இன்று கேலி நாட்டிலே, மேல்நாட்டுச் சூழ்நிலையிலே, கலாச்சாரத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களும் வாழ்க்கை முறைகளை எப்படி இருக்கும் சொல்லவா வேண்டும்.

"மேற்றிசை வாழும்
வெண்ணிற மக்களின்
செய்கையும் நடையும்
தீனியும் உடையும்
கொள்கையும் மதமும்
நம்முடையவற்றினும்
சிறந்தன. ஆதலின்
அவற்றை முழுதுமே
தழுவி மேற்கிடலால்
தமிழ்ச்சாதி தரணி
மீதிராது"

என்று நிலை வந்துள்ளதே இது என்ன விந்தை என மனம் இளைந்தவாறு கால் போன திசையில் செல்கிறேன்.

நேரமோ இரட்டி ஆகிவிட்டது இரவு 11 மணி தாண்டிவிட்டது. எனவே தமது இருப்பிடத்துக்குச் செல்லும் எண்ணத்தில் ராம் தரிப்பிடத்தை நோக்கி நடக்க.

(தொடரும் 42ம் பக்கம்)

www.padippakam.com

# 50 ரூபா ஆவது! அனுப்ப முடியவில்லையே!

- ஒரு கடிதம் -

அன்பின் நண்பா!

இன்று எமது நாட்டில் குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதிகள் இராணுவ வெறியினரினால் அழிக்கப்பட்டு வருகிறது. இதை நினைக்கும் போது பொங்கிக் கொண்டு அழுகைதான் வருகிறது.

என்னுடைய, உன்னுடைய அம்மாவென பொதுவாக எல்லோருடைய அம்மாக்கள் எங்களைச் சிறுவயதில் இருந்து எம்மை வளர்ப்பதற்காக எவ்வளவோ கஷ்டங்கள் பட்டிருப்பார்கள். அவர்கள் தங்கள் கனவை நனவாக்க முயன்றிருப்பார்கள். அன்றாடம் தாங்கள் உண்ணும் உணவை உண்ணாது அவ் உணவை எமக்குத் தந்து திருப்திப்பட்டிருப்பார்கள். இப்படியான அருமை பெற்றோர்களை விட்டுவிட்டு இங்கு வந்து அகதிகளாக வாழ்கிறோம்.

நாம் படிக்கும் காலங்களில் பெரிய பதவி வகித்து, பெரும் வீடு கட்டி, அம்மா அப்பாவை உயர் நிலைக்கு கொண்டு வர வேண்டுமென்பதற்காகவும் நாமும் லட்சியப் பாதையில் தீவிரமாக ஓடினோம்... ஆனால் இறுதியில் அவை எங்கே! யாவும் சிதறப்பட்டுவிட்டன.



படிப்பகம்

www.padippakam.com

உனக்குத் தெரியும்தானே! எங்கள் வீடு இடிந்தது. எனவே அம்மாவுக்குச் சொல்லுவேன்! அம்மா... நான் படித்துப் பெரியவனாகி.. நல்லாக உழைத்து பின்பு உங்களுக்கு ஒரு பெரிய வீடு கட்டித்தருவேன். என்று அடிக்கடி கூறிய நான் இன்று படிப்பும் அரை குறையாகவும் வேலையும் இன்றி இங்கு அகதிகளாக-வும் அறிவை சாகடித்தும் வாழ்கின்றேன்.

சோசல் பணத்தின் மிச்சம் பிடித்து வீட்டுக்கு தந்தால்..... அதுவும் சாப்பாட்டுக்கல்ல... வீடு கட்டு வதற்கல்ல... உடுபுடைவை வேண்டுவதற்கல்ல.... இன்று பயங்கரமாக தாக்கப்படும் இராணுவ வெடி குண்டுகளில் இருந்து தப்புவதற்கு இடங்கு... மீண்டும் வெட்டுவதற்கான செலவுக்கு. அதுவும் முடியவில்லை. அதுவும் இப்போதைய... இன்றைய நிலையில் அனுப்பமுடிய வில்லையே!

நான் என்ன செய்வேன்! இங்குள்ள வேலைகளுக்கு பணம் போதாது.. எங்கள் உயிரை காப்பாற்றி எம்மை இங்கு அனுப்பிய எமது அருமை பெற்றோரை நாம் காப்பாற்ற முடியவில்லையே!

இப்படிக்கு.
உனது நண்பன்.
[signature]

"அன்புதான் பிரபஞ்சத்தின் பிராணவேதம்
அன்புதான் மானிடத்தின் மங்கள நாதம்
அன்பு தான் ஆன்மாவின் ஆனந்தராகம்
அன்பு தான் உள்ளங்களின் அந்தரங்க கீதம்!" -

A. ANTONY-BALAN.



படிப்பகம்

www.padippakam.com

முன்னைய
கதை சுருக்கம் -

.. பல்கலைக்கழக வாழ்வில் விரிவுரையாளர் ஜெயநாதன் லக்சுமியை விரும்புவதும் அவ்விருப்பத்தை விரிவுரையாளர் ஜெயகாந்தன் உதவி கொண்டு மாணவி லக்சுமிக்கு தெரிந்ததும் ... லக்சுமியும் அவளோவி சந்திரிகாவும் ஆலோசித்ததும் ....



# கல்விக்குள் கண்ட காதல்

விரிவுரையாளர் ஜெயகாந்தனிடம் கூறிவோம் எனக்கு இப்போதைய சூழலில் இவற்றை விரும்பவில்லை எதற்கும் எனது படிப்பு முடியட்டும் அதன் பின்பு பார்ப்போம் என்று. முடிவுடன் லக்சுமி வீடு சென்றாள்.

வீடு சென்றவள் தான் பின்பு மூன்று நாள்களாக. பல்கலைக்கழகம் செல்லவில்லை. இதை அறிந்த சந்திரிகா லக்சுமியின் வீட்டுக்குச் சென்றதும் ... லக்சுமி சந்திரிகாவை கண்டதும் . படுக்கையில் இருந்து எழும்ப முயன்றும் எழும்ப முடியவில்லை. அப்போது சந்திரிகா அருகில் ஓடிவந்து படு, படு உனக்கு என்ன நடந்தது என்று அன்புடன் கேட்க.. அதற்கு பதிலாக ... லக்சுமியின் தாய் அவளுக்கு இரண்டு நாட்களாக. காய்ச்சலும் தடிமனும்.. உன்னிடம்


படிப்பகம்

www.padippakam.com

இருந்து வந்த இரவே. வருத்தம் ஆரம்பமாகி விட்டது என்று கூறி. இம்மா நான் உனக்கு. தேனீர் கொண்டு வருகிறேன். என்று கூறிவிட்டு செல்ல..

அப்போது மெதுவாக. இல்லை.. உனக்கு ஏன் இந்த வருத்தம் வந்தது என்று. இப்போது எனக்கு விளங்கி விட்டது. எல்லாம் அந்த விரிவுரையாளர் இவருடைய தான் என்பதை நன்கு விளங்கி வைத்தேன்... சோமு.... போடி.... உனக்கு இந்த விடயம் கூறினால் போது....என்றென்ன சுழி..

அப்போது சந்திரிகா...இந்த பாடி.. இவர்தான் விரிவுரையாளர் நீ வராத இரண்டு நாட்களும் உன்னை கண்ணிலும் வைக்க வேண்டும். என்று இருந்திருக்கிறோம் போலும் அது மேயில் உனது நினைவையும் அறியவோ, என்னவோ. அன்று இரண்டு நாட்களும். விரிவுரையாளர் இவருடைய லெக்சரியில் நான் படிக்கும் இடத்தில் இரண்டு இன்று. முறை வந்து சென்றேன் நான் நினைக்கிறேன் அவர் உன்னை பார்க்கத்தான்......என்று. குறும்பாக சிரித்தாள்..

இப்படி கதைத்துக்கொண்டு இருக்கும்போது லக்சுமியின் தாய்.... இந்தாபிள்ளை தேத்தண்ணி என்று கொடுத்து விட்டு எனக்கு தொங்கல் வேலை இருக்குப் பிள்ளை. நீங்கள் கதையுங்கோ. என்று கூறிவிட்டு சென்றாள்.

லக்சுமியும் சந்திரிகாவும் நன்கு உரையாடி விட்டு. விரிவுரை Notes எல்லாம். பின்பு நீ கொப்பி பண்ணலாம். அது பற்றியேயோ சிந்தித்து மனத்தை அலட்டிக் கொள்ளாமல் நன்கு உடலுக்கு ஓய்வு கொடு என்று



படிப்பகம்

www.padippakam.com

கூறிவிட்டு விடை பெற்று சென்றான்.

ஒரு கிழமைக்குப் பின்பு பல்கலைக்கழகத்து சென்றான். லக்ஷமி இவனின் சிநேகிதிகள் இவனின் சுகத்தை விசாரித்து விட்டு செல்கின்றனர். அப்போது இறுதியாக இவனுடன் படிக்கும் ரவி மிகவும் விளக்கமாக இவனின் சுகத்தை விசாரித்தான். இவனும் ஆறுதலாக பதில் கூறிவிட்டு விரிவுரை Hall செல்ல புறப்பட்டான்.

ரவி தனது மனதிற்குள் லக்ஷமி எவ்வளவு நற்குணம் கொண்டவள். அத்துடன் அழகும் கொட்டித்தான் கிடக்கிறது. உண்மையில் லக்ஷமியை திருமணம் செய்பவர்கள் பாக்கியசாலிகள்தான் என்று நினைத்துக் கொண்டு அவனும் விரிவுரை Hall க்குள் சென்றான். (மண்டபம்)

விரிவுரை மண்டபம் (Hall) அன்று சனவு நிரம்பி காணப்பட எங்கு இருக்கலாம் என்று தனது கண்ணை ஓட்டவிட அப்போது லக்ஷமி இருக்கும் இடத்தில் அருகில் இடம் இருக்க அங்கு சென்று அமர்ந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் விரிவுரை மண்டபத்தில் பொருளாதார விரிவுரையாளர் Good Morning என்று கூறிக் கொண்டு நுழைய. பதிலுக்கு இவர்களும் கூறினர். பின்பு விரிவுரையாளர் வளர்முக நாடுகளுக்கும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் உள்ள பொருளாதார வேறுபாட்டையும் அத்துடன் குறிப்பாக, இரும்புக்கட்டுப்பாட்டின் நிலையையும். விளக்கி வைக்கலானார்.

55 நிமிடங்கள் விரிவுரை நடைபெற்றது. விரிவுரையை முடிந்து பெற்று


படிப்பகம்

www.padippakam.com

நிலையில் அடுத்த விரி வுரையில் பிடித்து தொட ரும் என்று கூறிவிட்ட விரிவுரையாளர் சென்று விட்டார்.

அடமண்டபத்தை விட்டு எழும்பும் போது அருண் என்பவன் லக்ஷ்மியின் நீண்ட கூந்தலை ஒரு தரம் இழுத்து விட்டு தெரியாதவன் போல் பாவனை செய்தான் லக்ஷ்மி இதைப் பார்வையில் கண்டு அருணை பார்த்தாள். Sorry Miss. என்று கூறி ... என்ன அருண் என்று கூறிவிட்டு செல்ல. அப்போது ரவி அவளின் முகபா வத்தை மட்டுமல்ல அவளு டைய பாகங்களையும் உற்று நோக்கியபடி இருக்க அதே நேரம் லக்ஷ்மியும் ரவியை நோட்டமிட்டு.. ஒரு நொ டியில் கண்களை வெட்டி மறைந்தாள்.

லக்ஷ்மி லைப்ரரியை நோக்கி செல்லும் போது நினைக்கிறாள்.... இந்த ஆண் களின் பார்வைகள் எல்லாம் ஒரு குறிப்பான இடங்களில் தான் விழுகின்றனவோ. ஏன் தான் ரவி எனது அங்கங் களை ஆவலுடன் பார்க்கிறான் என்று நினைக்கிறாள் சிரித்துக் கொண்டும்.. மனதுக்குள். வெட்கித்து பின்பு லைப்ரரிக்குள் புகுந்து, கல்விக்குரிய புத்தகத்தை தேவையானதை புரட்டிக் கொண்டிருந்தாள் விரிவுரையாளர் ஜெயசாந் தனும் வேலாயுதமும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் அவசர Meeting என்று சென்று விட்டதால் ஓய்வு அனைத் தையும் தனது விடயங்களை பின்பு கூறலாம் என்று நினைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தாள். இப்பொழுதும் விரிவுரையாளர் வேலாயுதம் உருவம் தான் முன்நிற்பது போல் உள்ளது... தொடர் தொடர்... சம்பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு தாயின் கடிதம்

= கவிதை =

அம்பலவன் புவனேந்திரன்

அன்பு மகனே! இத்தனை காலமும் .. நீ
அரபு நாட்டில் உழைத்து போதும் - நாமினி
நன்றாய் வாழ்வதற்கு வழி சமைக்க - உடனே
நாட்டிற்குப் புறப்பட்டு வந்துவிடு!

எவ்வளவுதான் நீ உழைத்து அனுப்பினும்
என்னாளவும் நிம்மதியின்றி இங்கு
அல்லல்படும் எம்மவரை மீட்டெடுக்க
அவசரமாய்ப் புறப்பட்டு வந்துவிடுக!

இன்று நம்மண்ணில் குருதி பாய்கிறதே
இனியும் இதைப் பொறுக்கலாமோ மகனே?
நன்றாய் நீ உழைத்தது போதும் - உடனே
நாட்டிற்குப் புறப்பட்டு வந்துவிடு!

களத்திலே நிற்கிறான் உன்தம்பி - விடியலின்
கனவுகளைச் சுமக்கிறாள் தங்கை - தமிழ்த்
தாயகமொன்றை அமைத்திட - நீயும்
தயங்காமல் புறப்பட்டிங்கு வந்துவிடு!



படிப்பகம்

www.padippakam.com

தனித்தாயகமே நமக்குத் தேவை
தரங்கெட்ட சிங்களவனுடன் சேர்ந்தே - நாம்
இனியும் இழிவுடன் வாழ்வதா? - நம்
தாய் மண்ணை மீட்டிடத் தாவியே வந்திடு!

கோழையல்ல என் மகன் என்பதுவும் - நாம்
ஏழைகள் தான் என்பதும் எனக்குத் தெரியாதா?
அடிமைகள் நாமில்லை என்று - அறுத்து
அறிவிக்க அவசரமாய் நீயும் வா மகனே!

# செய்தி -

"CARITAS" நிறுவன சமூக சேவையாளர் திருமதி. Haarmann அவர்கள் DORTMUND ல் வாழ் தமிழ் மாணவர்களுக்கு (MALE NURSE) ஆண் தாதிகள் பயிற்சி நெறியைக் கற்பதற்கும், மற்றும் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி, தமிழ் நாட்டியம், விளையாட்டுத்துறை, போன்ற அம்சங்களில் அதிக கவனம் எடுத்து செயற்பட்டு வருகின்றார் என்பதை எமக்கு அறியத்தந்துள்ளார். அவருக்கு எமது நன்றி. தமிழ் மக்கள் நலனில் அதிக அக்கறை என்றும் காட்டி வருவதாக எடுத்துரைத்தார்.


படிப்பகம்

www.padippakam.com

# எதிரிகள்

பார்த்தீபன்

எனது பெயர் உங்களுக்கு அநாவசியமானது. நான் இயந்திர துப்பாக்கி இனத்தைச் சேர்ந்தவன். நான் பிறந்த இடம்! என்னவென்று கேட்கிறீர்களோ? இதைக்கூட உங்களால் உணர்ந்து கொள்ள முடியாதா? வேறெங்கே, வல்லரசு நாடொன்றில் தான். இங்கே யாரும் கருத்தடை செய்து கொள்ளவில்லை - எங்கள் பிரசவங்களைப் பொறுத்த வரையில்.

வெளியில் கவர்ச்சிகளை மட்டும் பார்த்துவிட்டு மூக்கில் விரல் வைக்கும் உங்களுக்கு இந்த விஷயங்கள் எங்கே தெரியப் போகின்றது!

எனக்கு கொஞ்சம் துக்கம். எங்களது பிறப்புகள் ஏன் இரகசியமாகவே வைக்கப்பட வேண்டும்? நாங்கள் தப்பான வழியில் பிறக்கவில்லையே! ஒரு வேளை ஆச்சரியமான முறையில் எங்களை அறிமுகப்படுத்துவதற்காகத்தான் மறைத்து வைத்திருக்கிறார்களோ? அல்லது.. இனிமேல் நாங்கள் நடந்து கொள்ளப் போகும் முறைகளை எண்ணிக் கவலைப்படுகிறீர்களோ?

இவ்வளவு தூரம் பயப்படுவதற்கு பேசாமல் எங்களை பெற்றுக் கொள்ளாமலே இருந்திருக்கலாம்.

யாருக்கு இது புரியும்? பிறந்த நாள் முதல் இருளில் தான் இருக்கின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com

வெளியுலகத்திற்கு வரவேண்டுமென்ற ஆசை இன்னும் மனதில் இருக்கிறதா?
வேர் வாவியில் போலிருக்கிறது.

என்னுடைய நண்பர்கள் பலர் வெளிநாடுகளுக்குப் போய்விட்டார்கள். [illegible] எனக்கும் ஒரே ஏக்கம்! நானும் வெளியே போகாமல் விட்டேனா?

காக்கி உடையணிந்த மனிதர்கள் எனக்கருகே இருந்து கதைப்பார்கள். இப்படிப்பட்ட ஒரு விடயத்தைத்தான் அவர்கள் எப்போதும் கதைப்பார்கள். ~~ஏன் இந்த நிலைமை இருக்கிறது~~??

'பயங்கரவாதிகள்', 'கொலை', 'துண்டு', 'போர்' — போன்ற சொற்கள் அடிக்கடி அவர்களால் பாவிக்கப்பட்டதால், அவை எனக்கு மனனமாகி விட்டது.

உலகம் முழுவதிலுமுள்ள நாடுகளின் பெயர்கள், அரசியல் நடைமுறைகள், சுற்றாடல்கள் எல்லாம் எனக்கு மனப்பாடம். எங்கோ ஒரு மூலையில் உள்ள நாடொன்றின், தெருப் பெயரைக்கூட இவர்கள் உச்சரித்தபோது, நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். என்னுடைய எஜமானர்களின் பெரிய மேதைகள் எனப் பெருமைப்பட்டேன். இப்படிப்பட்ட அறிவாளிகள் இவ்வுலகத்தை ஆளாமல் ஏன் இருளிலேயே இருக்கிறார்கள் என்று கவலைப்படுவதுமுண்டு.

அவர்களின் உரையாடலில் இருந்து உலகம் முழுவதும் எதிரிகள் இருக்கின்றார்கள் என்று தெரிந்தது. அந்த எதிரிகளை அழிக்கவே நான் பிறப்பிக்கப்பட்டேன் என்பதும் புரி


படிப்பகம்

www.padippakam.com

ந்தது.

பாவம் என்னுடைய எஜமானர்கள். அவர்களுக்குத்தான் எல்லாக் கவலையும், பொறுப்பும். இந்த உலகில் இவர்களைத் தவிர வேறு யாருக்குமே இந்தக் கவலையும், கடமையுணர்வும் இருக்காது.

ஒன்றுமட்டும் எனக்குப் புரியவில்லை!

திருடர்கள் என்றால் யார்? அவர்கள் எப்படி இருப்பார்கள்? அவர்களுக்கும் என் எஜமானருக்கும் என்ன வேறுபாடு? திருடர்கள் எப்படி எஜமானர்களால் அடையாளம் காணப்படுகிறார்கள்?

தெரியவில்லை!

எப்படித் தெரியும்? நான் தான் எப்போதும் இருட்டில் இருக்கின்றேனே. வெளியே போக சந்தர்ப்பம் கிடைத்தால் இவற்றை எல்லாம் அறியலாமே!

வெளியில் என்னதான் நடக்கிறது? உலகம் என்றால் எப்படி இருக்கும்? காக்கி உடை எஜமானர்களையும், அவர்களால் கொல்லப்படும் திருடர்கள் என்பவர்களையும் தவிர வேறு உயிரினங்களும் இருக்கின்றனவா?

எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள ஆவலுள்ளவனாய், வெளியே போகும் சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தேன்.

ஒருநாள் வேளை வந்துவிட்டது. திடீரென நானும், நண்பர்களும் பல இடங்கள் மாறினோம். அவசரமாகவும், இரகசியமாகவும். எஜமானர்கள் எல்லோரும் பரபரப்பாக இருந்தார்கள். வெளியே பார்க்க முடியாமல் பெட்டியில் நான் அடைக்கப்பட்டேன். என

க்கு எரிச்சலாக இருந்தது. எதையும் அறியவிடாமலும், புதினம் பார்க்க விடாமலும் அடைத்துவைத்திருந்த ஜெர்மனர் மேல்.

பேச்சுவாக்கில் "இலங்கை" அடிக்கடி அடிபட்டது. எனக்கு சந்தோஷமும். சொர்க்க பூமிக்குப் போகின்றேன். இலங்கையைப் பற்றி எனக்கு கொஞ்சம் கொஞ்சம் தெரியும். எல்லாம் ஜெர்மனர்களின் உரையாடலில் இருந்து பொறுக்கியது தான். சொர்க்க பூமியும் ஜெரிணா?. அந்தச் சிறிய நாட்டிலும் சண்டையா? இப்போது அவசரப்படலானேன். எல்லாவற்றையும் நேரிடையாகப் பார்க்கப் போகின்றேனே!

கப்பலில் பிரயாணம் செய்கின்றேன் என்பதை உரையாடலில் இருந்தும், அவதானிப்பில் இருந்தும் அறிந்து கொண்டேன். வேறு வேறு மொழிகளைக் கேட்க கூடியதாக இருந்தது. அதனை வேறு நாடுகளுக்கூடாக நான் பிரயாணம் செய்கின்றேன் என அறிந்துகொண்டேன்.

சீ... எதையுமே பார்க்க முடியாமல் இப்படி அடைத்துவிட்டார்களே!

கப்பல் பயணம் முடிவடைந்தது. திடீரென 'இலங்கை' என்றார்கள். அப்போதும் எனக்கு விடுதலை கிடைக்கவில்லை. அடைக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் பயணம். அப்போது தான் ஒரு வித்தியாசத்தைக் கண்டுபிடித்தேன். வெளியில் முற்றிலும் பரிச்சயமில்லாத மொழியால் உரையாடல்கள் நடந்துகொண்டிருந்தன. என்னுடைய

www.padippakam.com

எஜமானர்கள் எங்கே? இனி அவர்களைக் காண மாட்டேனோ? என்னை ஏன் இங்கு விட்டு விட்டுப் போகிறார்கள்? விற்று விட்டார்களா?

பயணம் முடிந்தது. எனக்கு விடுதலையளித்து வெளியே எடுத்தார்கள். ஆர்வத்துடன் அவர்களைப் பார்த்தேன். பாஷை, நிறமும் தான் வேறுபட்டனவே தவிர அவர்களின் உடைகளும் செயல்களும் பழைய எஜமானர்களைப் போலவே இருந்தன. என்னைத் துடைத்தார்கள். உறுப்புகளைச் சரி பார்த்தார்கள். என்னைப் பூசினார்கள். ஏதேதோ சாப்பிட தந்தார்கள்.

ஆ... இவர்கள் பழைய எஜமானர்களை விட என்னில் கரிசனையாக இருக்கிறார்கள். நன்கு பரிச்சயமானது போல் உறவாடுகிறார்கள். இவர்கள் எல்லாரும் நல்லவர்கள். இவர்களுக்குத் தொண்டு செய்யும் திறனை அடைந்தே தீரவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

ஆறுமுகன் என்னை தோளில் சாய்த்துக் கொண்டான். சுற்றிலும் பார்க்கின்றேன். நண்பர்கள் பலரை தோளில் சாய்த்துக் கொண்டு இன்னும் பலர் அணிவகுத்து நின்றார்கள். கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டதும் எல்லோரும் நடக்க ஆரம்பித்து விட்டார்கள். கட்டடத்தில் இருந்து வெளியே வந்ததும் தலைக்கு மேலே சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். 'ஹெலிக்கொப்டர்கள்'. ஆகா.. மிகவும் பலமான எதிரிகளைத் தான் சந்திக்கப் போகிறோம் என்பதைத் தெரிந்து கொண்



படிப்பகம்

www.padippakam.com

டேன்.

பாதைகளில் மரங்கள், செடிகளைத் தவிர வேறெதுவும் இல்லை. மனிதர்கள் எங்கே? நாடுமே போய்விட்டார்களா? அழிந்துவிட்டார்களா? மிக நீண்ட தூரம் நடந்ததும் இடிபாடுகளை வெவ்வேறும் உயரமானதிலிருந்து. அருகாமையில் மனிதர்கள் இருக்க வேண்டும் என்பதை தெரிந்து கொண்டேன். சுற்றிலும் பார்த்தேன்.

"தூரத்தில் சில அரை நிர்வாண நெடும்புக் கூடுகள் பயிர்களை ஆராய்ந்து கொண்டிருந்தன. வேறு சில சக்கரம் பொருந்திய அழுக்கான உடம்புகள் தரையை உடைத்துக் கொண்டிருந்தன. இவ் சுற்றிய மெல்லிய உடம்புகள் விளிம்புகளில் அடும்பை கவனித்துக் கொண்டிருந்தன. பெரு நிர்வாணமாயிருந்த சின்ன மனிதர்கள் மண்ணில் உருண்டு கொண்டிருந்தார்கள்.

இவர்களா மனிதர்கள்? சீ... இதென்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி. மனிதர்கள் என்றால் மிக பயங்கரமானவர்களாக இருக்க வேண்டும் இவர்களைப் பார்க்கவே அழுகை வருகிறதே!

மனிதர்கள் எங்கே? இன்னும் நீண்ட தூரம் போக வேண்டுமோ? ஆ... என்ன இது? என்னை இயக்கி[illegible]க்களே! ஐயோ... பாவம் அந்த உடல்கள். அக் கூட முடியாமல் சில்லு நூறாகி விழுகின்றனவே! என்னை இயக்க வேண்டாம். நிறுத்துங்கள், மண்ணில் உருண்டும், புரளும் சின்னதுகளுக்கு

இதுவுமே தெரியாதே! அவள் கூட கத்தி அழுகின்றாளே!

செயற்பட்டுக் கொண்டே யோசித்துப் பார்க்கின்றேன். எவ்வளவு தூரத்திற்கப்பால் இருந்து இங்கே வந்தேன். எவ்வளவு பத்திரமாக வந்தேன். எஜமானர்கள் எவ்வளவு விஷயம் தெரிந்தவர்கள். அவர்கள் செய்வது சரியாகத்தான் இருக்கும். நான் தான் திரிகளைத் தப்பாக கற்பனை செய்து கொண்டேன். திரிகள் என்றால் பயங்கரமாக இருக்கமாட்டார்கள். பாவமாகத்தான் இருப்பார்கள். யாரைப் பார்க்க ஏழையாக இருக்குமோ அவர்கள் தான் திரிகள். இவ்வளவு பெரிய வித்தியாசத்தை வைத்துக் கொண்டா திரிகளைக் கண்டுபிடிக்க சிரமப்பட வேண்டும்? நான் உத்தமமாய் இயங்கினேன். எஜமானர்களின் உண்மையான உதவியாளன்!

முற்றும்.

---

“நட்பு எவ்வளவுக்கெவ்வளவு பழைமையானதாக உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு உறுதியாகவும் உள்ளது”

— அரிஸ்டாட்டில் —

“ஒரு மனிதனின் தலைசிறந்த நண்பர்கள் அவனது பத்து விரல்கள்.”

— ராபர்ட் கோலியர்.

www.padippakam.com



— சிறுகதை —

# நான் ஒரு கணவனாகிறேன்

கிருபா • தங்கவேற்பிள்ளை.

தபாற்கந்தோர் மூடுகிற சமயமாகையால் ஒரே சந்தடியாக இருந்தது. அவனுடைய கவுண்டரை தாண்டிக்கொண்டு போவோரும், வருவோருமாக இருந்தார்கள். கண்ணெதிரே ஒரு தந்திப்பத்திரம் நிரப்பப்பட்டு பிரிக்கப்பட்டுக் கிடந்தது. எழுத்துக்கள் மேலெழுந்து அவனை நோக்கி வருகிறமாதிரிப் பார்த்துக்கொண்

புரிந்தது.

அண்மையில் இந்தத் தெருவுக்கு தபால்காரராக வந்தவன் தான் பார்த்திபன். மாற்றலாகி வந்த அன்றே 'செல்வி வீணா' என்ற பெண்ணுக்கு 35 கடிதங்கள் ஒரே நாளில் வந்ததைக் கண்டான். கடிதத்தைக் கொண்டு செல்லும் போதுதான் அறிந்தான், வந்ததனைத்தும் அவளுடைய கதைக்கான பாராட்டுகள் என்று.

சைக்கிளில் ஒரு கரம், தரையில் ஒரு காலுமாக சைக்கிள் மணியை அடித்துவிட்டு, 'Post..' என்று குரல் கொடுத்தான். கதவு திறப்பதற்கான எந்த அறிகுறியையும் காணோம். கதவு சாத்திய படியே இருந்தது. சைக்கிளை ஸ்டாண்டில் விட்டுவிட்டு கடிதங்களுடன் கதவை நெருங்கி தட்டுகிறான். ஏற்கனவே ஜன்னல் அருகே அமர்ந்திருந்தவள், ஜன்னல் திரையை விலக்கி எட்டிப்பார்த்தாள். அவன் நிமிர்ந்து பெயர் விசாரித்த போது, தலையைக் குனிந்து அவன் முகத்திற்கு நெருக்கமாக முகத்தைக் காட்டி, ஜன்னலின் வழியே ஒரு கையை நீட்டிய படி, "நான் தான்" என்று லேசாய் சிரித்தபடி கடிதங்களைப் பெற்றுக்கொண்டாள்.

அந்த இரண்டு, மூன்று நிமிடங்களுக்குள் என்ன தான் நேரிட்டிருக்குமோ? தெருக்கோடியைக் கடக்கும் வரை பார்த்திபனுக்கு அவள் கூப்பிடுகிற மாதிரியும், சிரிக்கிற மாதிரியும் இருந்தது. திடுக்கிட்டு,

பிறகு மனைவியிடமே என்று புரிந்துகொண்டான். எப்படி அத்தனை குறைந்த நேரச் சந்திப்புகளில் நம் மனதுக்குள்ளே சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து கொண்டு விட்டாள், என்று வியந்து கொண்டேயிருந்தான்.

அவளைக் கண்ட நாள் முதல் அவள் எழுதும் இணைப் பத்திரிகைகள் சேர்க்கலானான். இத்தனைக் கடிதங்களும் அவனுக்கு வரக் காரணமான அந்தக் கதையை தேடிப் படித்தான். பத்திரிகைகளில் நிறைய கதைகள் படிக்கிற வழக்கம் உள்ளவன் தான் அவன். ஆனால் இந்த மாதிரி ஒரு கதையைப் படித்தது கிடையாது! மனதுக்குள் அவளைப் பாராட்டினான்.

சாதாரணமாய் அடுக்கிய தினசரி கலைந்தாலே கோபம் வந்துவிடும் அவனுக்கு. நயமாக எடுத்துச் சொல்லியும், அம்மா அவ்வளவு பெரிது மறு சலிக்க அன்றைய தினத்தாளாக, அதுவும் வீணாவின் கதை உள்ள பக்கமாக எடுத்துப் போவது வழக்கமாகி விட்டது. மாடியில் தான் பார்த்திபனுக்கு கதைகளைப் படிக்க நேரம் கிடைக்கும். தேடுதல், சமையலறை குப்பைத் தொட்டியில் எண்ணெய்யும், மாவுமாக காட்சியளிக்கும். அம்மாவின் இந்தச் செய்கை அவன் இதயத்தையே காயப்படுத்துவது போல் இருந்தது.

நாட்கள் மின்னல் வேகத்தில் ஓடிக்கொ

www.padippakam.com

ண்டிருந்தது. அவனுக்கு வரும் விமர்சன கடிதங்களில் ஒரே நாளில் கொடுக்காமல் மறைத்து வைத்து, இன்றும் கூட அக்கடிதங்களைக் கொண்டு வரும் சாக்கில் அவளைப் பார்த்து வந்தான். இச்சந்திப்பு இருவர் மனதிலும் காதலாக உருவெடுத்தது. கண் ஜாடையாலேயே வளர்ந்த அந்த காதலுக்கு வார்த்தைகளுக்கு இடமில்லை.

அன்று தபால் கொடுக்கச் சென்ற போது, ஜன்னல் ஓரம் அவளைக் காணவில்லை. அவளுடைய தகப்பன் வாசலில் நின்று வாங்கினார். வழக்கத்திற்கு மாறாக இப்படி நடந்தது பார்த்திபனுக்கு ஏதோ போலாகிவிட்டது. தகப்பன் அந்தண்டை நகர்ந்ததும், ஏமாற்றத்தோடு மீண்டும் ஜன்னலை நோக்கிப் பார்வையை விட்டான். அங்கே அவள் முகம் தெரிந்தது. அவசரமாய் அவன் பக்கம் ஒரு முத்தத்தைப் பறக்க விட்டு விட்டு, திரையை உள்ளே இழுத்துக் கொண்டாள். எல்லாம் நிஜமாகவே நடந்ததுவோ தானோ? அல்லது இடைவேளையில்லாத கனவுதானா...? அவன் மனதில் யோசனையிலிருந்த விஷயம் ஒன்றே ஒன்றுதான். அதை அவளிடம் கேட்பதா? வேண்டாமா?... இன்று அதற்குப் பதில் கிடைத்துவிட்டது.

அன்று காலை தபால்களை சேகரிக்க கந்தோருக்குப் போனபோது, அடுத்த வாரத்தில் இருந்து பார்த்திபனுக்கு தபால்கள்



படிப்பகம்

www.padippakam.com

தோணியேயே வேலி என்ற வெற்றி கிடைத்தது. ஒரு புறம் மகிழ்ச்சியும், மறுபுறம் இனி முன் போல் வினோவைப் பார்க்க முடியாதே என்ற தவிப்பும் இருந்தது. அவள் தான் காதலுக்கு சமாதிக் கட்டிவிட்டாளே! என்ற வேதனையும் இருந்தது மனதுக்குள்.

மூன்று, நான்கு நாட்களாக வினோவைக் காணவில்லை. அவளுடைய அப்பன் தான் கடிதங்கள் வாங்கிச் சென்றார். அதற்குள்ளும் முன்னினை ஒரு வில்லன் முந்திவிட்டான் என்று தோன்றியது பார்த்திபனுக்கு.

வினோ வீட்டு வாசலில் நின்ற வாடகைக் காரில் இருந்து சக்கர நாற்காலி வண்டியை இருவர் வெளியே இறக்க முயன்று கொண்டிருந்தனர். அவளுடைய வீட்டிற்குள் நுழைவதற்கு சந்தர்ப்பம் பார்த்து, பார்த்திபனும் சக்கரநாற்காலியை தூக்கிக் கொண்டு உள்ளே செல்ல கை கொடுத்தான். Hall இல் நின்ற சக்கர நாற்காலியை அறைக்குள் உருட்டிச் சென்றார் வினோவின் தந்தை. வண்டியில் இருந்தபடியே கையால் உருட்டிக்கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள் வினோ. ஒரு நிமிடம் நிலை தடுமாறினான்.

அவளுக்கு விபத்தொன்றில் இரு கால்களுமே ஊனமாகி விட்டதை அன்றுதான் அறிந்துகொண்டான். வண்டிச் சிந்து உடைந்ததன் காரணமாகத் தான் அவள்

www.padippakam.com

நன்றாக நேரம் காணமுடிய வில்லை என்ற உண்மை விளங்கியது. அவளிடம் அறியாமல் அவன் உடலில் இருந்த நடுக்கம் ஏற்பட்டது. உடம்பெங்கும் வியர்க்கிற மாதிரி இருந்தது. தெருவுக்கு வந்த போது சில்லென்ற இளங்காற்று அவனைத் தழுவிக்கொண்டது.

தெருக்கள் நேரிலேயே வெளியாகிவிட்டதால், முன் போல் விநோவைப் பார்க்க முடியாமல் போய்விட்டது. அதனால் அன்றிலிருந்து ஒரு யந்திரத்தனமாய் இருந்தானே தவிர எதிலும் அவன் மனம் செல்லவில்லை. அறிய முடியாத கவனம் எங்கெங்கோ அலைந்துகொண்டிருந்தது. வேலையில் இருக்கும் தான் இந்த விநோவை விட்ட பிறகும் என்ற அவன் நினைவுக்கு நேரிலேயே கிடைத்தது. அவனால் அவளை மறக்க முடியவில்லை. அவளுக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது.

நாலைந்து நாள் பார்த்திபன் கண்டு மனம் உடைந்தான் விநோ. புதுத் தம்பதிகாரனைக் கண்டான். மனசுக்குள் இருந்துகொண்டு இந்த பார்த்திபன் எங்கே? என்ற கேள்வியின் பதிலின் அதுவல் மனதைக் கிடைத்துக்கொண்டிருந்தது. தைரியம் வரவில்லை. யாருடம் கேட்பதற்கு.

"ஒரே மாதிரியாக இந்த விசாரங்களைத் தாங்கி அடக்க வேண்டும்" என்றவரின் குரல் பார்த்திபன் சாவிநினைவுக்கு வந்து வந்தது.


படிப்பகம்

மறுகணம் அருகா ட்டை நோக்கி அவளை நெருக்கின் மறந்தது. அங்கே விஜியின் உயிரற்ற உடலின் மீது அவளின் தந்தை, "நீ தற்கொலை செய்து கொள்ள என்ன காரணம் என்று சொல்லாமல் போய்விட்டாயே...." மகளின் மறிவை ருத்தி துக்கம் கலங்க அழுகை. பார்த்திபனால் துக்கத்தை அடக்கி வைக்க முடியவில்லை. தன்னைப் பார்க்க முடியவில்லை என்றதால் அவள் தேடிக் கொண்ட முடிவை நினைத்துக் கதறி அழுதான். தீயில் வேகப் போவது அவள் உடல் மட்டுமல்ல, பார்த்திபனின் ஆசைகளும், கனவுகளும். உணர்வானவள் என்ற விஜியும் அவனுக்கு வாழ்க்கைத் துணையாக வர முடியாவிட்டாலும், அவளுடைய வாழ்க்கை முடிவுக்கு அவன் துணையாக எண்ணிவிட்டான். விஜியின் தந்தையிடம் இருந்து கொள்ளி வைக்கும் பொறுப்பைப் பெற்றுக் கொண்டான்.

ஆமாம்.... அவள் மீது நெருப்பை அள்ளிக் கொட்டி அவளின் கனவுகளையே இன்று ஈமக்கடன் கனிச் செய்து முடித்தான்.

— முற்றும் —

> எருமை வாங்கு முன் நெய் விலை பேசாதே; பிள்ளை பெறு முன் பெயர் வைக்காதே! தீம்பனி பண்ணி மனக் கோட்டை கட்டி வாழ நினைக்காதே!

www.padippakam.com

ARUN JOTHI Beauty Clubஇன் மாதாந்த போட்டி இல.

இம்மாதப் போட்டியில் உங்கள் அதிஷ்டங்களைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

இந்த மாதம் மோதும் பிரபல நட்சத்திரங்களான் ராதா, ராதிகா இருவரில் யாருக்கு உங்கள் வாக்கு? பெரும்பாலான வாக்குக்கிடைத்த நடிகைக்கு வாக்களித்தவர் -களில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தெரிவு செய்யப் படுவார் அவருக்கு அருண் ஜோதியின் பரிசுப் போனஸாக ஒருமாதகாலத்திற்கு ஜெமினி சினிமா அனுப்பி வைக்கப் படும்.





இறுதி

ஓகஸ்ட் 25ம் திகதிக்கு முன்பு

**போட்டி விதிமுறைகள்**

பரிசுக்கூப்பனை நீங்களாகத் தயாரித்தும் அனுப்பலாம். ஆனால் இங்கே குறிப்பிட்ட கூப்பன்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ([illegible])

போட்டி முடிவுகள் ஓகஸ்ட் மாத இதழில் வெளிவரும்.

அனுப்ப வேண்டிய முகவரி:- S. Shanthirakumar
Overdyker Str. 126
4630 Bochum 1
West-Germany

இங்கே கத்தரிக்கவும்.

போட்டி இல 4

| | |
|---|---|
| ராதா | |
| ராதிகா | |

பெயர்:

முகவரி:

தொலைபேசி இலக்கம்

தபால் செய்து அனுப்பவும்...

www.padippakam.com

# யூன் மாதப் போட்டி முடிவுகள்

கடந்த மாதப் போட்டியில் பங்கு பற்றிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ரேவதி 18 வாக்குகள்

சுகாசினி 35 வாக்குகள் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

| | |
|---|---|
| ரேவதி | |
| சுகாசினி | X |

போட்டி இல. 3

பெயர்: A. UTHAYAKUMAR,

முகவரி: WALKÜREN STR-37
5630 REMSCHEID.

தொலைபேசி இல: 02191-34-24-70

ஜுலை மாத

ஆனந்த விகடன்

S. Shanthirakumar,
Overdyker Str-126,
4630 Bochum 1,
West Germany.

படிப்பகம்

www.padippakam.com

# ARUNJOTHI BOOK CLUB

## 4630 Bochum 1

இந்திய வார மாதாந்த சஞ்சிகைகளைப்
பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

*

மொத்தமாக வாங்குபவர்களுக்கு
விசேட கழிவுகள் வழங்கப்படும்.
விபரங்களுக்கு நேரிலோ அல்லது
தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும்.

ARUNJOTHI BOOK CLUB
BOCHUM

www.padippakam.com

ஜூன்மாதம் தொடக்கம் கீழ்வரும் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளலாம்

Lifco Dictionary

ஆங்கிலம் - ஆங்கிலம் - தமிழ் ]- 1334 Pages

தமிழ் - தமிழ் - ஆங்கிலம் 671 - Pages

Little Lifco Dictionary

ஆங்கிலம் - ஆங்கிலம் தமிழ் 450 Pages

பேசும் படம்

பொம்மை

ஜெமினி சினிமா

திரைச் சித்ரா

குமுதம்

ஆனந்த விகடன்

காவல்கள்

கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்து மதம்

வெகுவிரைவில்

பண்டிற் சேதுராமனின் எண்சோதிடமும் உங்கள் வாழ்க்கை ரகசியங்களும்.

விபரங்களுக்கு நேரிலோ அல்லது தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளவும். தபால் காரரிடம் பணம் செலுத்திப் பெறக்கூடிய முறையில் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படும்.

# அரிச்சுவடிப் பயணங்கள்

- ச.சா ஆனந்தன் -

அன்பின் வடிவான அன்னையின் கருவில் பந்தங்கள்
உருவாக்க வரும் பத்துமாதக் காலப் பயணம்
ஆரிரரோ கேட்டிருந்து ஆடி அடியெடுத்து பின்
ஆனந்தமாகத் துள்ளியோடிப் பள்ளிசெல்லும் பயணம்
இறையருள் துணையிலும், இயற்கை நியதியாலும்
இளமைப் பூங்காவில் இறக்கை கட்டிப்
பறந்து வலம்வரும் இன்பப் பயணம்.

சான்றோர் மனம் மகிழ அறிவிலும், ஆற்றலிலும்
மிகைத்து, பொருள் தேடி, மின் துணை தேடி,
ஈரேழு உலகங்களும் எம் காலடியில் என இறு
மாப்புடன் இன்புறத் தொடரும் இல்லறப்
பயணம்.

உலகம் உருண்டையானது என உணர்ந்தும்
உணராதவர் போல், உலகெல்லாம் உணர்ந்தோராக்
கரியவன் ஒருவன் இருந்திடும், அடுத்த கணம்
யாது நடந்திடுமெனவறியாது, உலக இன்ப
துன்பங்களில் உந்தப்படும் உணர்ச்சிப்பயணம்.

www.padippakam.com

உடல் பின்பு ஆடல் என்று வண்டிச்சக்கர ஓட்டம் ஓடும் வரை ஓடி, ஓய்ந்து, ஒய்யாரம் இழந்தும் ஒன்றிணைந்து உருவாக்கிய மழலைச் செல்வத்தின் வருங்காலத்தை நினைத்து வருந்துகிறதும் பயணம்.

என் பிள்ளைக்கு, என் பிள்ளைக்கு என்று என்ன செய்வேன் ஏது. செய்வேன் என எண்ணியெண்ணி, எங்கோ தொலைவில் இருக்கும் நாட்கள் மனக்கண்களில் ஓடி அயர்ந்திடும் ஏக்கப்பயணம்.

ஏணிப்படிகள் என ஏறுவது தான் வாழ்க்கை என்று எண்ணி இறுமாந்திடாது, இறக்கமும் உண்டு என்பதினை மெல்ல மெல்ல உணர்ந்திடும் அனுபவப் பயணம்.

இனிமையான இளமைக்காலத்தையே எல்லோரும் தேடித்தேடி திரிந்து களித்துத் தேய்ந்தது தேகம் தான், உருவத்தை வரவேற்கும் மனப்பக்குவம் கொண்ட மாண்டவர் இறைநெறியும், இறைவ நீர் செல்வத்தின் பொருள் பொருள் விளக்கம் தேடும் பயணம்.

எதிர்பார்த்த நாட்கள், மாதங்கள், வருடங்கள் இனித்திட காலமும், நமக்கு நமக்கென பேசி கழித்தன. வீட்டுக்கன்றி நாட்டுக்கென யாது செய்தோம்,

ஒரு செய்தோமென எண்ணித் திரும்பிப் பார்த்து நாணித் தலை குனியும் பயணம்.

ஊடகங்கள் பல உட்கொண்டு, மெல்லென முடங்கிருக்கும் ஆருயிரைக் கெட்டியாகப் பிடித்திருக்க முயற்சிகள் பல செய்து, இறையடி சேரும் இன்பநாளைத் திடமுடன் இறந்த கைகளுடன் வரவேற்கத் தயாரிக்கத் தத்தளிக்கும் பயணம்.

எது எப்படியாயினும், முள்வேலி கொண்டு மூடி மறைத்திருந்தாலும் இயமன் தனது பாசக் கயிற்றைக் குறித்த நேரத்தில், குறித்த இடத்தில் வீசியே தீருவான்.

வாழக் கருதிய மனதுக்காக வாழும் பயணமில்லை. வானில் பறந்து தென்றல் தாலாட்ட பட்டத்துக்காகப் பாடிப் பயணமில்லை. அதனால், வாழ்க்கை எனும் வண்டிச்சக்கரம் சுழன்று கொண்டேயிருக்கும் பரம்பரை எனும் பகடைக் காய்களால் – இது பகிடி அல்ல பச்சை உண்மை.

———

www.padippakam.com

# கென்னடியின் இறுதி வாழ்வில்

-TONY-

கடந்த மாதத் தொடர்ச்சி

25 நாட்களின் பின் அவன் கையில் விலங்கிடப்பட்டு விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டான். அப்போது பார்வையாளர்களில் ஒருவனாக நின்ற Jack Ruby சுடப்பட்டு 48 மணித்தியாலங்களுக்குள் எந்த வைத்தியசாலையில் கென்னடி இறந்தாரோ அதே வைத்தியசாலையில் அவனுடைய உயிரும் பிரிந்தது.

24 வயதாகிய இவன் எப்போதும் தனிமையையே விரும்பும் மார்க்சிய பயங்கரவாதி எனப்பெயர் பெற்ற அமெரிக்கன். அமெரிக்க Marines பிரிவில் பணியாற்றி திறமையாகச் சுடக்கூடியவன் எனப்பெயர் பெற்றவன். பிரத்தியேக காரணங்களுக்காகப் பதவியில் இருந்து விலகியதும் சோவியத்யூனியனுக்குச் சென்று அங்கு குடியுரிமை கேட்டு மறுக்கப்பட்டவன். அங்கு ஓர் பெண்ணை மணந்து ஓர் குழந்தையுடன் 2½ வருட வாழ்க்கையின் பின் மீண்டும் அமெரிக்கா போய், அப்போது அங்கு ஜனாதிபதியாக இருந்த கென்னடிக்கு மன்னிப்புக் கடிதம் எழுதியதன் பேரில் மனிதாபிமானத்தின் அடிப்படையில் மன்னிக்க

www.padippakam.com

ப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பட்டவன். ஆனால் அவன் எண்ணம் மாறுபட்டிருந்தது. 1963ஆம் ஆண்டு அவன் அந்த இத்தாலியன் துப்பாக்கியை வாங்கிய பின் கியூபாவின் கஸ்ட்ரோ இயக்கத்தின் ஆதரவாளனாக மாறி, கஸ்ட்ரோவின் அமெரிக்காங்களில் போராட்டத் தொடங்கினான். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் இவன் அந்த வாசிகசாலைப் பணி வேலையையும் தேடிக்கொண்டு அந்த இடத்தைத் தனக்குச் சாதகமாகப் பாவித்து, அங்கு குன்றுயிரைப் பறித்தவன். Jack Ruby இவனைச் சுட்டதற்குப் பல காரணங்களைக் கூறினர். எதுவும் நியாயமானதாக இருக்கவில்லை. ஆனால் இவன் டல்லாஸ் நகரில் Malia இயக்கத்தின்

ஆள் சிறிய புள்ளி. கென்னடியின் கொலையை விசாரிப்பதற்கு "Warrant Commission" நியமிக்கப்பட்டு 3,154 பேர் விசாரிக்கப்பட்டு, 25,000 விசாரணைகள் மேற்கொள்ளப்பட ஓஸ்வேல்ட் தான் இவ்வப்படிதான் செய்தான் என்று தீர்மானித்தனர். ஆனால், 1970ல் Congressmen Committe 2 வருடங்களாக மீண்டும் பரிசீலனை செய்து, கென்னடி திட்டமிடப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் என்று தெரிவித்தனர். ஏனெனில் கென்னடி இறந்ததும், பதவிக்கு வந்த Lyndow. B. Johnson ஆள் கம்யூனிசப் பின்னணி. ஆகவே, ஒருவேளை அல்லது, கஸ்ட்ரோவின் கை இக்கொலையின் பின்னே இருந்தது ஆனாலே


படிப்பகம்

www.padippakam.com

பிதன் பிறிர இடது சாரி
நடவடிக்கைகள் கல்பறோ
விற்கு எடுப்பிய அபோக
ங்கள் இருந்தச் சான்று.
கொண்டி கடப்பட்ட இட
த்திலிருந்து 100 யார் தொலை
வில் ஒர் Caldow Arnolo
படைவீரன் வேலைட்டார்
பாவனையை நன்கு அவதா
னிக்கக்கூடிய ஒர் தனி
மையான இடத்தில் வெ
டிம் காணுதவண்ணம் அவ
த்தப்பட்டிருந்தான். இவ
ன் இவ்விருவன் தான் இறக
லியப் பிரிவு ஒருவன்
என அடையாள அட்
டையைக் காட்டி.
அதேவேளை அவ்விடத்
தில் இருந்து அகற்றி
விட்டான். விசாரணை
யின் போது அப்படி
ஒருவன் அவ்விடத்தில்
நியமிக்க படவில்லை என்
றும், அவெட்டிமா இடி

தொழுகைக்கு 1 அரை கெலத்தி
ற்கு மேலாக பேர் குபோ
ரிக்கோ இன்று பாய்ந்தா
லுடம் தெரியவந்தது.
கொண்டி கொலை செய்ய
ப்படுவதற்கு முன்னிரவு
காவற்து ஒட்டலில்
Rubyயுடம், Bradiry
என்ற பயங்கரவாதியுடம்
சந்தித்துக் கதைத்தனர்.
இவர்களின் நண்பன் Ferrb
ஆல்விமான். கொண்டியின்
கொலை சம்பந்தமாக போலி
சாரால் கைது செய்யப்ப
ட்டவர் பிரம்பிக்கப்பட்ட
போது தற்கொலை செய்
ததாக எழுதிய இறுதி
ப்புக்களுடன் இறந்து கிட
க்கக் காணப்பட்டான். இவன்
இறந்த 16 மணித்தியாலத்
திற்கு பின் போலீசாரால்
கொப்பட்ட இன்னொரு
வன் Eladio de Valle

தொடர்ச்சி 44ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# சலங்கைப் பூஜை

- வானதி - தேவேந்திரராஜா (நடன ஆசிரியை)

பரதம் என்பதற்கு மூன்று விதமாக அர்த்தம் கூறலாம் அதாவது பரதமுனிவரால் பரப்பப்பட்ட கலை என்பதால் பரதகலை என்றும், பாரத நாட்டில் இக்கலை பிறந்ததால் பரதகலை என்றும், பாவம், ராகம், தாளம் மூன்றும் இணைந்த கலை என்பதால் பரதகலை எனப்பட்டது என்று பல்வேறு வகையில் அர்த்தம் கொள்ளப்பட்டிட இக்கலை எமது அரும் பெரும் செல்வமாகும் கலை என்பது இறைவனால் அளிக்கப்பட்ட ஒரு கொடை அது எல்லோருக்கும் அருளப்படுவதில்லை. இத்தகைய ஒரு கலையை நாம் கற்பது இறைவனை வழிபடுவதற்கு ஒப்பானது என பரத சாஸ்திர நூலில் பரத முனிவர் கூறியுள்ளார். நடனத்தினைப் பயின்று ஆடும் போது முக்கிய அணிகலனாக அணியப்படுவது சிலங்கை நடனமாடும் ஒருவர் முதன் முறையாக அரங்கு ஏறி நடனமாடும்போது அந்நிகழ்ச்சிக்கு முன்பாக சலங்கைப் பூஜை நடாத்துவது ஒரு மரபு ஆகும். அதாவது நடராஜப் பெருமானின் பாதங்களில் சலங்கையை வைத்து அதற்கு பூஜை செய்து, குருவின் ஆசீர்வாதத்துடன் குருவின் கைகளினால் அச்சலங்கையைப் பெறுவதே -- "சலங்கைப் பூஜை" எனப்படும். அச்சலங்கையை அம் மாணவி யாரிடமும் கொடுக்கவோ விற்கவோ கூடாது. அச்சலங்கை அம்மாணவி கால்களில் மட்டுமே அணியப்படல் வேண்டும் கலையின் முக்கியத்துவம் உணராவிடில் தெய்வீகக் கலையான பரதக்கலையினை நாம் நல்ல முறையில்


படிப்பகம்

www.padippakam.com

பயில முடியாது.

எவ்வொரு கல்வியினையும் நேரடியாகவந்து நல்ல குருவிடம், நல்ல முறையில் பயில்வதே சாலச்சிறந்ததாகும்.



டோர்ட்மெண்டில் (ஜேர்மனி) உள்ள இந்து ஆலயத்தில் நடராஜப் பெருமான் முன்னிலையில், கடந்த ஆனி மாதம் 9ம் திகதி நடைபெற்ற சலங்கைப் பூஜையின் ஒரு பகுதியினையும், நடன ஆசிரியையும், படத்தில் காண்கிறீர்கள்.

மாணவ, மாணவிகளும், பெற்றோர்களும் மற்றும் பல தமிழ் மக்கள் கூடி பக்தியுடன் நடாத்திய இப்பூஜையில் பிரசாதங்கள் வழங்கப்பட்டு இனிது நடந்தேறியது.

- 'வாழ்க நம் கலை'.

தகவல் - ராசா ஆனந்தன்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல 7

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ம | 2 கா | 3 ரு | 4 மா | 5 கா | 6 ரு | 7 ஷி |
| 8 து | 9 பா | 10 ■ | 11 ணி | 12 சு | 13 ரு | 14 ம |
| 15 சூ | 16 | 17 ■ | 18 க | 19 சி | 20 தி | 21 பு |
| 22 சு | 23 ண | 24 ட் | 25 க | 26 ப் | 27 ப | 28 ம் |
| 29 ண | 30 | 31 ■ | 32 ம் | 33 ரு | 34 | 35 த |
| 36 ண் | 37 | 38 சா | 39 | 40 ■ | 41 ஏ | 42 ■ |
| 43 ■ | 44 | 45 ப | 46 | 47 | 48 ஆ | 49 டை |
| 50 | 51 | 52 ம் | 53 பு | 54 | 55 ம் | 56 தி |

ஆக்கம் - மாட்டீன் -

1-7 - அகிம்சையின் தந்தை

8-9 - பெண்களைக் குறிக்கும் ஒரு சொல்

11-14 - மங்கையர் உபயோகிக்கும் நகைப்பூச்சுகளில் ஒன்று.

15-16 - திருநாவுக்கரசர் இந்நோயால் வருந்தி இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார்,

19-21 - புதியது என்பதன் கொச்சை மொழிச் சொல் இது.

22-24 - செல்வத்தைக் குறிக்கும் ஒரு சொல்.

25-28 - பண்டைய காலத்தில் ஒரு நாட்டு மன்னன் வேறொரு நாட்டு மன்னனுக்குச் செலுத்துவது இது.

32-35. இந்து சமயத்தவரின் கிரிகை அனுஷ்டானங்களில் இதுவும் ஒன்று.
36-39- இலங்கையின் திருத்தலங்களில் ஒன்று.
44-48- அணிகலன்களின் மறுபெயர் மறைந்துக் குழம்பிக் கிடக்கிறது.
50-54- பழமை என்பதன் ஒத்தகருத்துச் சொல் குழம்பியுள்ளது.
55-56- தமது என்ற சொல்லின் குறுகிய வடிவம்

மேலிருந்து கீழ் -

1-36- மாயவனை இப்படியும் அழைக்கப்படுகிறான்.
2-16- நோய்களில் ஒன்று.
4-32- விலையுயர்ந்த கற்களில் ஒன்று குழம்பி இருக்கின்றது.
5-33- ஆரோக்கியம் என்பதை இப்படியும் சொல்லலாம்.
6-27- பறவைகளில் ஒன்று.
7-14- இது இருந்தால் மலையைக் கூட வெல்லலாம் என்பர்.
21-28- தவறு என்பதன் மறுபெயர் தவறிமாறிக் கிடக்கிறது.
30-51- நீர்நிலைகள், குளங்கள் இப்படியும் அழைக்கப்படுவது உண்டு.
38-52- முனிவர்கள் சினம் மிகுதியால் கூறும் கூற்றை இதுவாகும்.
39-53- மிருகம் ஒன்று தலைகீழாயுள்ளது.
41-55- மலர் மாலை உதிர்ந்து கிடக்கின்றது.
49-56- இடையூறு என்பதன் மறுசொல் மேல்கீழாய் நிற்கிறது.

குழம்பியுள்ளவை - 25, 32, 44, 50, 5, 6, 30, 41.
வலமிடம் - 11, 8, 19, 55, 36,
தலைகீழ் - 7, 21, 39, 49,

கு.எ. போட்டிப்படிவத்தினை தயாரித்தோ, கத்தரித்தோ நிரப்பி அனுப்பலாம்.

www.padippakam.com

குறுக்கெழுத்துப் போட்டி இல.6 ல் சரியான விடை எழுதி யோர்களில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்டவர்-

Mrs.J.THIRUPARAN.

chemnitzer.str.3o
46oo.Dortmund.1.

---

சரியான விடை எழுதிப் பாராட்டினைப் பெறுபவர்கள்,

Mrs.Manjula.Shanmugarajan.58oo,Hagen.
Mrs.Kumuthini.Deivendran.5942,Kirchhundem.1
Mrs.Niruba.Thangavetpillai.46oo,Dortmund.41.
Mrs.Yogeswary.Ariyaratnam.46oo,Dortmund.1.
Miss.Ranjani.Navaratnarajah.46oo,Dortmund.41.
Miss.Thusi.Kirshnakanthan.4o53,Jüchen.1.
Mrs.Vasanthi.Sivanantarajah.563o,Remscheid.
Mr.V.C.Karunainathar.563o,Remscheid.
Mr.Ampalavan.Pavanenthiran.563o,Remscheid.
Mr.A.Antony.46oo,Dortmund.1.
Mr.K.Arulrajan.462o,Castrop-Rauxel.
Mr.Fatme.Chandra.463o,Bochum.1.
Mr.S.M.Rathan.4712,Werne.
Mr.V.Sithiravelauthapillai.563o,Remscheid
Mr.S.Nagulan.563o,Remscheid.
Master.Lini.Kirshnakanthan.4o53,Jüchen.1.

கு.எ.போட்டி இல.6 ன் முடிவுகள் அடுத்த தீபத்தில் வெளியாகும்.

---

கு.எ.போட்டியில் சரியான விடை எழுதும் அதிர்ஷ்டசாலி ஒரு வருக்கு - "சித்திரத் தாண்டிய ஜேர்மன் கோலங்கள்" என்னும் நூல் வழங்கப்படும்.

குறிப்பு- புரட்டாதி 20ந் திகதிக்கு முன்பு விடைகளை அனுப்பி வையுங்கள். (கு.எ.போட்டி)


படிப்பகம்

 www.padippakam.com

முயல்கின்றார். அவ்வாறு போகும்போது உயர்ந்த கட்டிடம் பல்வளை வண்ண வெளிச்சத்துடன் குறிப்பாக இவ்வெந்த வெளிச்சமும் அதிக மாகக் காணப்பட்டு அவை விட்டு விட்டு ஒளி வீசியது. அவ்விடங்களெல்லாம் விலை மாதர்கள் வதிவிடம் என்பதை அங்குள்ள ஆங்கில எழுத்துக்கள் மூலம் அறிந்து கொண்டார். தனக்குள் சிரித்துக் கொண்டும், மறுபக்கம் தனது கண்ணை நோக்க விடும் போது எதிரில் வீரசைவ முன்பு கண்ட தமிழ் வாலிபன்போல் அவருக்கு தென்பட்டது. இவ் வாலிபர்கள் போர்க்க, விறுவிறுக்க வந்து கொண்டிருந்தனர். பாரதியார் அவர்களைக் கண்டு அவர்களை எதிர் நோக்க மனமின்றி ஒதுங்கிக் கொண்டார்.

அன்னை பராசக்தியே! மகாசக்தியே இக் காட்சியைக் காணவா? என் உயிர்ப்பித்தாய் 50 வயது பெற்றெடுக்க அறுப்ப மணமின் இந்த விலைமாதருக்கு இலஞைப் பொழுதுக்கு வாரி விட்டு இச் செல்வ மகன்மார் போவதைப் பார்த்தாயா? தமிழினம் இன்னும் எங்கே போய் முடியப் போகிறதோ தெரியாது... என்று தலையில் கை வைத்தார்.

அதிர்ச்சியான நிலையிலும் பாரதியின் சிந்தனை வேலை செய்யத் தொடங்கியது. "நாம் மணக்க விரும்பும் பெண்கள் கற்புள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்பும் ஆண்கள், தாம் கற்பிழப்பதில் என்ன நியாயம் இருக்கிறது? என்று எனது சிந்தனையில் என்றோ ஒரு கேள்வி எழுந்தது அ மற்றவர்களும் பார்த்து அறியட்டும் எனக் கவிதையிலே.


படிப்பகம்

www.padippakam.com

எழுதி விட்டேனே அவர்
சீர் பார்க்கவில்லையா?
படிக்கவில்லையா? சிறப்
எதிர்பார்க்கும் ஆனந்தம்
தாமும் சிறப்பாக வாழ்ந்தான்
வேண்டும் என்று என்
நினைப்பதில்லை. என யோசித்
திவாறு தாம் எழுதிய கவிதை
-யை நினைவுக்கு கொண்டு
வருகிறார்.

" கருப்பு நிலையென்று
சொல்லவந்தார்- இரு
கட்டிருக்கும் அம்சத்து
பொதுவில் வைப்போம்"

என இரு சாராருக்
கும் கருப்பு பொது என்று
தானே சொல்லிவைத்தேன்.
இப்போதான் உணர்கிறேன்
நான் பாடிய பாடல்கள்
என்ன நிலையில் செதுக்கப்
பட்டு ஒரு நிலையில் செத்தி
தேடுவாரற்று இருப்பதைக்
காண்கிறேன். வந்தே
மாதரம்... என்று வாய்
முணு முணுத்தது.

மறுபடியும் வாய்க்குள்
வந்தே மாதரம் என
முணு முணுத்துக் கொண்டு
ராம் தரிப்பிடத்துக்கு வர.
ராமும் வந்தது.. தனது
இடத்துக்கு செல்ல ஏறிக்
க் கொண்டார்.




" வலிமை சேர்ப்பது தாய்முலைப்
-பாலடா!
மானம் சேர்க்கும் மனைவியின்
- வார்த்தைகள்
கலியழிப்பது பெண்களறமடா!
கைகள் கோர்த்து களித்து -
- நின்றிடுவோம் " *



படிப்பகம்

www.padippakam.com

36ம் தொடர்ச்சி

என்பவன் மியாமியில் ஓர் காருக்குள் கொலை செய்யப் பட்டிருந்தான் ஜோசப் பொலீசார் Tippi யை ஒஸ் வேல்தான் கொன்றுள்ளான் என தீர்மானிக்கப் பட்டபோதும் அந்த கொலையை நேரில் கண்ட சாட்சிகள் பலர் அவன் ஒஸ்வால் ட் அல்ல என்று சாட்சியளித்தனர்.

கென்னடியின் மரண விசா ரணையின் போது Jack Ruby யை விசாரணை செய்த மூன்று பத் திரிகை நிருபர்களில் ஒருவர் துப்பாக்கியால் சுடப்பட்டும், அடுத்தவர் கராத்தே வெட்டுக்க ளாலும் மற்றவர் மேலதிக போதை மாத்திரை கொடுக்கப் பட்டு இறந்துள்ளனர் நீதி மன்றத்தில் வாய் திறந்து ஒரு சொல்லு சொல்லு முன்பா கவே ஒஸ்வேல்டின் வாய் மூடப்பட்டது கென்னடி ஒஸ்வேல்ட்.

இறந்த அதே வைத்தியசாலை யிலேயே Ruby யும் புற்று நோயால் உயிர்துறந்தான். ஆகவே எல்லா விசாரணை களையும் அமெரிக்காவின் கொம்யூனிச கைக்கூலிகளின் கட்டுக்கதை என்று சொல்லும் மாதர் இருந்த கென்னடி காறிப்பர் உண்மையை வெறுத்த டல்லாஸ் டோ வாழ் பணம் படைத்த இடதுசாரி, வலது சாரி தீவிர, பயங்கர கூட்டத்தி னின் கூட்டுடன் கொலை செய்யப்பட்டாரா?

முடிவு இன்றும் மர்மமாகவே உள்ளது.





படிப்பகம்

www.padippakam.com

# நான் படித்துச் சுவைத்தவை



அன்றைய குறிக்கோள்,

மகாபாரதத்தில் துரோணரிடம் வில் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் பரீட்சிக்கப்படுவதற்காக அழைக்கப்படுகிறார்கள்.

அவர்களைப் பரீட்சிப்பதற்கு குறியாக மரமொன்றில் இருந்த பறவை காண்பிக்கப்படுகின்றது. துரோணர் பரீட்சிக்கப்படும் ஒவ்வொருவரையும் ஒழுங்கு முறைப்படி கூப்பிட்டு

பறவையின் தலை தெரிகிறதா?

பறவையின் உடம்பு தெரிகிறதா?

பறவை இருக்கும் மரக்கிளை தெரிகிறதா?

என்று ஒவ்வொரு கேள்வியாகக் கேட்கிறார்.

வருபவர்கள் ஒவ்வொருவரும் 'ஆம் பிரபு


படிப்பகம்

www.padippakam.com

'ஆம் பிரபு, ஆம் பிரபு, ஆம் பிரபு எல்லாமே தெரிகிறது' என்றார்கள்.. ஆனால் அவர்கள் அம்பு எய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

அர்ச்சுனனின் முறை வருகிறது தொடர்ந்து கேட்கப்பட்ட அதே கேள்விகள் அவரிடம் கேட்கப்படுகின்றன.

'பறவையின் தலை தெரிகிறதா?'

'ஆம் பிரபு'

'பறவையின் உடம்பு தெரிகிறதா?'

'இல்லை.'

'பறவை இருக்கும் மரக்கிளை தெரிகிறதா?'

'இல்லை.'

'இப்பொழுது உனக்கு என்ன தெரிகிறது'

'பறவையின் தலையைத்தவிர எதுவும் தெரியவில்லை பிரபு.'

'நீ அம்பைத் தொடுக்கலாம்.'

அப்போது அர்ச்சுனன் குறிபார்த்த பறவையை நோக்கி அம்பை எய்கிறான்.

மற்றவர்களின் புலன் குறிப்பிட்ட இலக்கில் செல்லவில்லை அர்ச்சுனன் புலன் குறிக்கப்பட்ட இலக்கைத் தவிர மற்றைய எதிலும் செல்லவில்லை. அதனால் அர்ச்சுனனின் குறிக்கோள் நிறைவேறக் கூடியதாக இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# நட்பு -

கர்ணனும், அவரது நண்பர் துரியோதனன் மனைவியும், சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். வெற்றி தோல்வி நிர்ணயிக்க முடியாமல் இருவரும் ஆளை ஆள் கேலி செய்த வண்ணம் இருந்த வேளை...

துரியோதனன் வரவை அறிந்த அவரது மனைவி தான் இருந்த இடத்தை விட்டு எழுந்த போது... கர்ணன் அவளைத் தொடர்ந்து விளையாட அழைக்கும்படி அவளது சேலையைப் பற்றி இழுக்கின்றான். அப்போது அவளது இடையை அலங்கரித்துக் கொண்டிருந்த ஒட்டியாணம் அறுந்து அதில் பொருத்தப்பட்டிருந்த மணிகள் உதிர்ந்தன.

துரியோதனனைக் கண்ட கர்ணன் செய்வது அறியாது துடிக்கிறான். தனது தவற்றைச் சொல்லுகிறான்.

துரியோதனன் நண்பன் மீதோ மனைவி மீதோ சந்தேகப்படவில்லை. 'உங்கள் இருவரையும் நான் அறிவேன் உங்கள் ஆட்டம் நிற்காமல் தொடரட்டும் இங்கே சிந்திய மணிகளை எடுக்கவா... கோர்க்கவா!' என்றான்.

துரியோதனன் எவ்வளவு பொறாமைக் காரனாகவும், கெட்டவனாகவும் இருந்தாலும் அவன் கொண்டுள்ள நட்பு தூய்மையானது.



படிப்பகம்

# பாரதப் போர்.

மகாபாரதத்தில் நாட்டை ஆளும் உரிமை பஞ்ச பாண்டவர்களுக்கே உரியது. ஆனால் அந்த நாட்டை கௌரவர்கள் வஞ்சனையால் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

வஞ்சிக்கப் பட்டவர்களின் சார்பாக கண்ணன் தூது செல்கிறான். கண்ணன் சண்டையை விரும்பவில்லை சமாதானத்தையே விரும்புகிறான்.

கௌரவர்கள் தூதுவரையும் மதிக்கவில்லை அவர் சொன்ன சமாதானத்தையும் புறக்கணித்து விட்டனர்.

கண்ணன் நாடு ஆளும் உரிமை உன்னவனுக்கு நாட்டில் அரை பங்குக்கு என்றாலும் உரிமையுண்டு. ஆனால் அதை கொடுக்காவிட்டாலும் ஐந்து ஊராவது கொடு என்றான்.

கௌரவர்கள் 'ஐந்து ஊர் என்ன ஐந்து வீடுகூடக் கொடுக்கமுடியாது" என்று கூறிவிட்டார்கள்.

தூதுவர் சொன்னார்.. போர் என்றால் போர். தூது சென்றவர் பாதிக்கப்பட்டவர் பக்கம் நின்றார். தர்மம் வென்றது அதர்மம் அடங்கியது.

— மணியம் —

www.padippakam.com



# சிறுவர் களஞ்சியம்

I கதை,
V பொது அறிவுப்போட்டி.

## இரு வரங்கள்.

ஓர் ஊரில் வயது போன முதியவர் வாழ்ந்து வந்தார் அவருடைய பெயர் கந்தசாமி அவருக்கு மனைவியோ பிள்ளைகளோ எவரும் இல்லை அவர் தனிமையாக ஒரு சிறிய குடிசையில் வாழ்ந்து வந்தார்

ஒரு நாள் அந்தக் கிராமப் பகுதியில் ஒரு முனிவர் சென்று கொண்டிருந்தார் அப்போது அவருக்கு சரியான தாகமும், பசியுமெடுத்தது அவர் அங்குமிங்கும் பார்த்தார். ஏதாவது நீர் வீழ்ச்சி இருக்குமோ வென்று. ஆனால் அங்கு ஏதுவுமிருக்கவில்லை.


படிப்பகம்

www.padippakam.com

அவர் என்ன செய்வதென்று தெரியாமல் இன்னும் சிறிய தூரம் நடந்தார். தூரத்தில் ஒரு குடிசை இருப்பதைக் கண்டார். முனிவர் அந்தக் குடிசையை நோக்கிச் சென்றார் கடைசியில் அந்தக் குடிசை வாசலில் நின்று கதவைத் தட்டினார். உள்ளேயிருந்த வயது போன கந்தசாமி கதவைத்திறந்தார் முன்னால் முனிவர் நிற்பதைக் கண்டு திகைத்தார். உடனே உள்ளே வாருங்கள் என்று அழைத்தார்.

உள்ளே கூட்டிச் சென்று அவரை அமர வைத்து தங்களுக்கு என்னிடத்தில் என்ன தேவையென்று பணிவுடன் கேட்டார் முனிவரும் தனக்கு தாகமும் பசியுமாக இருப்பதாகக் கூறினார் வயது போன கந்தசாமி என்ன செய்வதென்றே தெரியாமல் தான் புதிய உணவிற்காக பழங்களை எடுத்துக் கொடுத்தார் முனிவரும் அதை வயிறார அருந்திவிட்டு அன்பனே உனக்கு என் மனமார்ந்த நன்றி என்று சொல்லிவிட்டு உன் உதவிக்காக நான் உனக்கு இரு வரங்கள் பரிசாக அளிக்கிறேன் நீ இந்த வரங்களைச் சொன்னால் நீ நினைத்தது கிடைக்கும் என்று சொல்லிவிட்டு விடை பெற்றார்.

வயது போன கந்தசாமி என்ன செய்வதென்றறியாமல் ஒரு வரத்தை எடுத்து தனக்கு நிறைய பொற்காசுகள் தேவையென்று வேண்டினார். உடனே அவர் முன் பொற்காசுகள் கிடந்தன. அவர் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார். திடீரென அவருக்கு ஒரு யோசனை தோன்றியது



படிப்பகம்

இந்தப் பொற்காசுகளையெல்லாம் திருடன் கண்ணில் பட்டு திருடிவிட்டால்? ... வயது போன கந்தசாமி என்ன செய்வதென்றறியாமல் மறுநாள் வரத்தில் இந்தப் பொற்காசுகள் மற்ற எவர் கண்ணுக்கும் தெரியக்கூடாது எனது கண்களுக்கு மட்டுமே தெரிய வேண்டுமென்று வேண்டினார். அந்த வரமும் அப்படியே நிறைவேறியது.

அடுத்தநாள் வயது போன கந்தசாமி அந்தப் பொற்காசுகளில் சிலவற்றை எடுத்துக் கொண்டு பொருட்கள் வாங்க கடைக்குச் சென்றார். கடையில் சாமான்கள் வாங்கியதும் இந்தப் பொற்காசைக் கொடுத்தார். அந்தப் பொற்காசுகள் கடைக்காரனின் கண்களுக்குத் தெரியவில்லை. கடைக்காரன் என்ன ஐயா? கந்தசாமி உமக்கு இந்த வயசுபோன காலத்திலும் விளையாட்டுத்தான் என்னையா! என்று சொல்லிச் சிரித்தான். கந்தசாமியோ ம்... ம்... பிடியும் என்று பொற்காசை நீட்டினார். கடைக் காரனும் காசு ஒன்றும் தெரியவில்லை. சீ.. சீ.. விளையாடியது போதும் காசைத் தாருங்கள் என்று சற்று கோபமாகக் கேட்டான். கந்தசாமியும் யோசித்துவிட்டு தன் பிழைகளை உணர்ந்தார். தான் வேண்டிய வரத்தின் பிழையை உணர்ந்த கடைக்காரனிடம் மன்னிப்புக் கேட்டு ஒன்றும் செய்ய முடியாமல் ஆழ்ந்த தியானத்தின் வீடு திரும்பினார் கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையென்று கதையை நினைத்துக் கண்ணீர் விட்டார்.

— டொறின் அன்ரனி —

www.padippakam.com



# பொது அறிவுப்போட்டி -4-

1. டைனமைட்டைக் கண்டு பிடித்தவர் யார்?
2. கி.மு. - கி.பி. என்பதன் பொருள் என்ன?
3. உலகின் முதற் பெண் பிரதமர் யார்? அவர் எந்தநாட்டை சேர்ந்தவர்?
4. பஞ்சமாபாதகங்கள் எவை?
5. இலங்கையின் இயற்கை துறைமுகம் எது?
6. பஞ்சபாண்டவர்கள் யார்?
7. பகவத்கீதை யாரால் யாருக்கு உபதேசிக்கப்பட்டது?
8. மாட்டின் லூதர் என்பவர் யார்?
9. இலங்கையின் சனத்தொகை எவ்வளவு?
10. தோமாஸ் ஆல்வா எடிசனின் கண்டுபிடிப்பு யாது?

கடந்த மாதம் நடைபெற்ற பொது அறிவுப் போட்டியில் ஒருவருமே சகல வினாக்களுக்கும் பதில் அளிக்கவில்லை. இவர்களுள் 13 கேள்விகளுக்கு சரியான விடை எழுதி போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு பரிசினை தட்டிக் கொள்பவர்.

Miss.DORIS.ANTONY.

Gabelsberger str.2.
4600,Dortmund.1.

இவருக்கு எமது பாராட்டுக்கள்.



படிப்பகம்

www.padippakam.com

பத்துக் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதி கலைவிளக்கின் பாராட்டினைப் பெறுபவர்கள்.

Miss.Apiraami.Thavamanirajan.5130,Geilinkrichen
Miss.Thusi.Kirshnakanthan.4053,Jüchen.1.
Mi[illegible]s.Janani.Jeyanesan.5000,Köln.
Miss.Vijetha.Ramalingam.4712,Werne.
Master.Sriskantharajah.Navaratnarajah.
4600,Dortmund.41.
Master.Lini.Kirshnakanthan.4053,Jüchen.1.

---

அதிர்ஷ்டசாலிக்குரிய பரிசை அன்பளிப்புச் செய்பவர்:

Mr.A.BALAN. Hamburger str.35. 4600.Dortmund.1.

---

கடந்த மாத பொ.அ.போ. வினாக்களுக்கான விடைகள் -

(1) போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் (2) யூரிககாரின், (3) 1330, (4) வில்லிபுத்தூரர். (5) லக்சபான, அபர்டீன் [illegible] (6) அருணகிரிநாதர். (7) அது, இது, உது. (8) 365¼. (9) வாசிங்டன். (10) கலிலியோ கலிலி. (11) சிலப்பதிகாரம், வளையாபதி, மணிமேகலை, குண்டலகேசி, சீவகசிந்தாமணி. (12) பட்டினத்தார். (13) கிறீன்லாந்து (14) ~~[illegible]~~ அலெக்சாண்டர் பிளெமிங். (15) வாழைச்சேனை.



படிப்பகம்

www.padippakam.com

# சமையற்குறிப்பு

வெப்ப காலத்தில் சிக்கனமான, சுவையான, சுலபமான
கோலா ஐஸ்கிறீம்.

தேவையான பொருட்கள்:-

1 டின் பால் (Indian இனிப்பான)

1 லீற்றர் கோலா.

செய்முறை:-

டின் பாலை ஒரு பாத்திரத்தில் ஊற்றி கோலாவையும் (Cola) இந்த சிறிது ஊற்றி முட்டை அடிக்கும் கருவியால் நுரைவரும் வரை அடிக்கவும் பின் 1/2 மணித்தியாலங்கள் குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்து பரிமாறுவோம்.

பரிமாறும் போது தேவைப்படின் சீனிப்பாகு ஊற்றிய பிஸ்கட்டுகளை சிறிய துண்டுகளாக வெட்டி கிறைண்ட் பண்ணி (அரைத்து) போடலாம். இனிப்பில்லாத டின்பால் என்றால் சீனி சேர்க்கவும்.

திருமதி. S. பத்மலிங்கராஜா.

"நல் கவனமுள்ள நண்பனைப் போல் வாழ்க்கையில் வேறு பாக்கியமில்லை" — யூரிபிடிஸ்.



படிப்பகம்

www.padippakam.com

# பொன்நகரில் [BONN] ஊர்வலம்

- ராஜசாந்தி -

கடந்தமாதம் 6.6.1987 சனிக்கிழமை காலை 9 மணியளவில் பொன்மாநகரில் ஜேர்மன் வாழ் தமிழீழ மக்களால் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடாத்தப்பட்டது. இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் உட்பட வெளிநாட்டுமக்களுமாக சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டார்கள். இலங்கை சிங்கள அரசால் தமிழீழ மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட எரிபொருள், உணவு அத்தியாவசிய பொருட்கள் தடையினை நீக்கக் கோரியும், தமிழீழமக்கள் மீது சிங்கள இனவெறி அரசால் மேற் கொள்ளப்பட்டுவரும் மிருகத்தனமான இராணுவ நடவடிக்கைகளையும், விமான குண்டு வீச்சுக்களையும் நிறுத்தக் கூறியும், இந்திய அரசே ஸ்ரீலங்கா அரசின் இனவொழிப்பு நடவடிக்கைகளை நிறுத்த எனக்கூறியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. ஊர்வலம் ஆரம்பித்து முடியும் வரை பல இளைஞர்கள் தமது உடலை வருத்தி) தமிழீழ மக்களின் துயர நிலையைக் கூற பிரதிபலித்தபடை



(தொடர்ச்சி 6ம் பக்கம்)

படிப்பகம்

# (ஜோர்) மணிக்குறள்

1 செயற்கரியவற்றைச் செய்யார் பெரியார் — இங்கு மற்றவர் செய்வதையும் விடார்.

2. வேலை செய்வதைப் போன்ற ஆக்கமும் இல்லை — இங்கு அது இல்லாமலிருப்பது போன்ற கேடும் இல்லை.

3. உதவி செய்ய நினைப்பது நன்றன்று - அஃதும் உதவியை எதிர்பாராது வாழ்வது நன்று.

4. மது அருந்தும் பொழுதுதான் இன்பம் - தவிர்த்தால் வாழ்நாள் பொழுதுவரையும் இன்பமே.

5. தன்நிலைமையுணராது பிறன் பழி கூறினால் அவன் பழி பிறரால் தூற்றப்படும்.

6. உத்தியோகம்தான் எங்கும் புருஷலட்சணம் அதுவன்றி உடையும் பொற்சங்கிலியுமல்ல.

— விக்ரு —

குறிப்பு — "சமுதாயத்தின் சந்திப்பு" நாடகம் அடுத்த இதழில் தொடரும் —

www.padippakam.com

# குழந்தை

பிறப்பிலே ஒவ்வொரு குழந்தையும் களங்கமற்று தூய்மையாக உலகில் தவழ்கின்றது. ஆனால் தவறான வளர்ப்பு முறையே அக்குழந்தையை அவலையாக (தவறாக) மாற்றுகின்றது என்று சரியான குழந்தை வளர்ப்பு முறையின் அவசியத்தினை உறுதிப்படுத்துகின்றார் உளவியலறிஞர் எரிக் ஃபொர்ம்.

மனித ஆளுமை ஆக்கத்தில் சூழலும் மரபுக் காரணிகளும் பெரும் பங்கை வகிக்கின்றன. எனினும் குழந்தை உருவாக்கலில் பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் பரிவும் பாதுகாப்பும் சிறப்பம்சங்களாக அமைகின்றன. குழந்தைப் பருவத்தில் இருந்தே ஒருவரது நற்குணங்கள் திறமைகள் எவ்வளவுக்கெவ்வளவு கண்டு பிடிக்கப்பட்டு, வலியுறுத்தப்பட்டு வளர்க்கப் படுகின்றனவோ, அவ்வளவு அவ்வளவு தீய குணங்கள் நலிவுறுத்தப்பட்டு ஒழிக்கப்படும். ஒரு புறத்தில் தீய குணங்கள் புறக்கணிக்கப்பட மறுபுறத்தில் நற்குணங்கள் வளர்க்கப்படும். தீய குணங்களின் தேய்வு நற்குணங்களின் வளர்ச்சியிலேயே தங்கியிருக்கின்றது. எனவே, குழந்தைகளின் நற்பண்பாடுகள் வளர்வதற்கான சூழலினை வீட்டிலும் சுற்றாடலிலும் ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோரின் கடமையாகும்.

வீ.பீ.

- நன்றி -

உள்ளம்



படிப்பகம்

www.padippakam.com

14ம் பக்கத் தொடர்ச்சி-

மனம் இவ்வாறு விரை
வில் கோபாலனிடம் பறி
கொடுத்துவிட்டதே....
பேராசிரியர் சீனாபதியின்
பின் கருத்துகள் படி.
காதலின் பரம்பர உணர்
வுகளுக்கு மேலும் எந்த
விளக்கமும் கொடுக்க
முடியாதது என்பது உண்
மைதான். இருக்க வந்தேன்.
காதல் கொண்டேன்.
என்று கதையாகி விடாமல்.
படிப்பிலும் கவனம் செலுத்த
வேண்டும் என்று மனதுக்
கு சமாதானம் கூறிவிட்டு.
எப்படியும் எனது என்ன
க்கருத்தை நண்பி சந்திரி
காவிடம் கூறிவிட
வேண்டுமென என்னை
சந்திரிகாவும்... என்ன
லக்சுமி உன்னை தான்
தேடித்திரிகிறேன் என்று
வேகம் தரும் குரலில்
கேட்க... அனை....

என்ன சந்திரிகா ஒரு
மாதிரி இருக்கிறாய்....
என்று வினவ....

விரிவுரையாளர் ~~கோபா~~ ,ஜெயகாந்
தன் இராணுவத்தில் சேர
சேர்ப்பட்டு விட்டார்.
என்ற செய்தி... இப்போது
தான் கோபாலன் விரிவுரையா
ளர் கூறினார். தான்
ஒருவாறு தப்பித்து வந்து
விட்டதாக கூறி....
தான் இனிமேல் பல்கலை
கழகத்துக்கு வரும் அவசி
யம் இல்லை என்றும்.
என் தாய் நாட்டுக்கு தமிழ்நாட்டுக்கு ஒரு
அதும் ஒரு நல்ல செய்தி
வரும் வரை போராடப்
போகிறேன் என்று கூறி
முடித்தார்.

இவ்வாறான போராட்ட
த்தில் விரிவுரையாளர் கோ
பாலனுடன் தானும் தீவி
-ர இருக்கப் போகிறேன்
என்று கூறி புறப்பட்டு வி
டாள்.. லக்சுமி..

— முற்றும் —



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் பக்கம்

கலை விளக்கு ஆசிரியருக்கு!

உங்கள் கலைவிளக்கு சொர்ண வாழ் தமிழ் மக்களின் அறிவை மென்மேலும் வளர்ச்சியடைய செய்வதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இம்மாதம் (நவம்பர்) வெளியிடப்பட்ட பொது அறிவுப் போட்டியை நான் வரவேற்கிறேன் இப்படியானவற்றை மேலும் வெளியிட எனது வாழ்த்துக்கள்,

V. பதுல். பிரகலாதன்
5760 ARNSBERG.2.

அன்புள்ள ஆசிரியருக்கு!

ஆனிமாதம் கலைவிளக்கு சஞ்சிகை படித்தேன். பூகோளம் மிகுதி மாதந்தோறும் ஒவ்வொரு நாடுகள் பற்றியும் தகவல் தருகிறது. எமக்குப் பயன் படுகிறது.

குறுக்கு- தவறாயின விடைகளை .... திருத்திக் கொள்ளவும்,

V. இந்திரவேலாயுதபிள்ளை,
5630. REMSCHEID.

அன்பின் கலைவிளக்கே!

உனது அபரித வளர்ச்சி கண்டு மகிழ்ச்சியடைகிறேன் நீ என்றென்றும் ஒளி வீசிப் பிரகாசிப்பாயாக. சிறுகதைகளை அதிகம் சேர்த்துக் கொள்ளாமல் குறைத்துக் கொள்ளமாட்டாயா? மாதம், மாதம் உன்னை எதிர்நோக்கியிருப்பேன்

திருமதி. சிகுமார்.



படிப்பகம்

www.padippakam.com

அன்பின் கல்விளக்கே!

[redacted] கல்விளக்கு சிட்டாய் விட்டுப் பிரகாசிக்க எனது வாழ்த்துக்களுடன் ஆதரவும் உண்டு. குறைநாளைக் கூடியளவுக்கு கவிதைக்கு அவையங் கூடாது. ஆனி மாத இதழில் சில கவிதைகளைப் பிழைகள் கண்டேன். ஆசிரியரே சஞ்சிகையின் மேல் பிரதியை தாங்களும் சரிபார்ப்பதில் மட்டும் நின்றுவிடாமல். வேறு ஒருவரிடமும் பிரதியை காட்டினால் இலகுவில், தெளிவாக தவறுகளை இனம் காணலாம்.

- மணியம் Remscheid -

அன்பின் கல்விளக்கிற்கு!

எனது வாழ்த்துக்கள் இலக்கிய மணம் பரப்பும் நீ. ஏன் சினிமா உலகத்தைப் புகுத்தி உனது தரத்தை குறைப்பது போல் தெரிகிறது. விளம்பரதாரருக்காக நீ உனது தரத்தை தாழ்த்திக் கொள்ளாதே. போட்டி நடத்துவோர் வேறு விதத்தில் போட்டிகள் நடத்தலாம் அல்லவா? இதில் கவனம் எடுப்பாய்.

சிவகன்
4000, Düsseldorf.

கல்விளக்கே!

நீ - 90 பெனிக்குடன் எம்மை வந்து அடைந்து... ஜேர்மனியில் ஒரு விலை குறைந்த சஞ்சிகை என்று நிரூபித்து... தரமாகவும் ஒளிவீசுகிறாய். உனது சேவை மென்மேலும் தொடரட்டும்.

- இரத்தினம் -
4600 DORTMUND.



படிப்பகம்

www.padippakam.com

SRI LANKA SPORTS CLUB
IM WACHOLDER 11
7151 ALLMERSBACH .I.T

மேற் காட்டிய விளையாட்டு கழகத்துடன் தொடர்பு கொண்டு Foot ball, Cricket (புட்போல், கிரி-க்கட்) ஆகிய விளையாட்டுப் போட்டி-களில் கலந்து கொள்ளுங்கள்.

வெற்றி யாருக்கு.....

தொடர்புகட்கு —

S.NESAN, RAJAN } 07191.58125

VIYAN 07191.54227

MUTHU 07191.85076

---

"நாக்கு மூன்று அங்குல நீளம்தான் ஆனால் அது ஆறு அடி உயரமுள்ள மனிதனையும் கொன்றுவிடும்"

- யப்பான் பழமொழி -

"பேசாத வார்த்தைக்கு நீ எஜமான் பேசிய வார்த்தை உனக்கு எஜமான் பேசிய பிறகு வருந்துவதை விட பேசுவதற்கு முன்பே யோசனை செய்வது மிகவும் நன்று." (ஆங்கிலப் பழமொழி)

தொகுப்பு — திருமதி - S. ஸ்ரீலிங்கநாதராஜா

படிப்பகம்

www.padippakam.com



PHOTO COPIES ARE FREELY DONE BY

CARITAS

OF

DORTMUND AND LÜNEN

படிப்பகம்